is now fitted with a loud speaker and all the pupils in the school are enabled to hear at the same time being seated in their respective desks what is spoken from the Headmaster's room or from the school Radio Station. Sri A Swami Aiyah is in charge of the 'U. C. Radio Station' and chalked out programmes are given through it everyday. I commend the contributions of the pupils towards the sucsess of the U. C. Radio Programme. I take this opportunity to thank the pupils in Mrs. Cromwell's Organisation in America, who have made a presentation of a Radio through the UNESCO to the pupils of this High School. Books of reference useful for masters and books suitable for pupils were added to the Library. In pursuance of the policy of the Educational authorities to make the school library available for the public also, we keep open our library and most of our old boys use the volumes with advantage.

The Secretarial Section under the Bifurcated Courses in our School offers a vocational training to our pupils for life immediately after their school final class. Again this year we have purchased 3 Typewriters and 12 Typewriter tables and stools for the Secretarial Section and 40 dual desks with a Government grant of Rs. 2785/-

SOME ACTIVITIES:

Under reorganisation of Secondary Education the classes and squads have a very elaborate programme chalked out for the year and their manifold activities are found helpful in fostering team spirit and team games in equipping youngsters for life and in training them for leadership. As the District Educational Officer has put it "in all our activities we have followed a well organised plan and progress charts have been maintained. The pupils' parliament met 3 times this year and the ministers of the cabinet assisted the Headmaster in maintaining discipline, cleanliness and orderly movement.

Under the guidance of the Masters in Social Studies our classes have become more lively Each class had their outings to nearby places on many days during the year and on two occasions a mass excursion was arranged to visit Courtallam and Madras.

In addition to the Printed School Magazine a number of classes got up manuscript magazines that give scope for the expressional side of the pupils' life in and outside the school. Sri D. M. Isaiah David, in charge of IV Form A Section and Sri Ratnaraj James in charge of IV Form B Section deserve congratulations for their good work in this line. We are happy to see the enthusiasm and the originality shown by the pupils in contributing to the class magazine articles, sketches and photos of really high order.

We have our registered Boy Scout group by name Vasa Troop which is as active as it was usually before and the Red Cross Society which spares no pains to attend to the sick and to the cleanliness of the school.

Under the auspices of the Literary and Debating Societies, the Urudu Anjuman and Thiruvalluvar Day were celebrated on a grand scale this year also. It was the school

pupils parliament that planned the programme for those celebrations and handled the finance very ably.

The Sports Committee met often and planned out our programme of activities in the field of Physical Education-the whole school having been divided into 4 houses. Our school Annual Sports were held on House Basis on the 23rd and 24th March, 1955 and after the ceremonious March Past, Olof A. Johansson Esq., kindly declared open the Sports meet and Mrs. A. Johansson gave away the prizes to the winners. I take this opportunity to convey to them our gratitude and thankfulness for their kindness in complying with our request.

Our Intermediate Athletes achieved a special distinction in Sports in the Disttict Inter-Secondary Schools' Sports meet and won for the school a *TROPHY*. I congratulate the competitors and the Athletes for their success in games and sports.

A word about the Hostel. "The Arasaradi Hostel with its spacious grounds provides a great relief for all community activities." One could see the hostel boys having their worship every early morning before they begin their daily routine and in the evening on the play grounds or in the garden seeking their recreation.

If the school has been able to do something as aforesaid it should be attributed solely to the kind and experienced Manager and to the unstinted co-operation of a conscientious and hard working set of masters under me. The staff council meets periodically to discuss, to plan out and to review all the school activities and to devise means and methods to keep the efficiency and tone of the school. We work as a family and live like a family and our whole programme is Christ centred. The more we succeed in teaching our pupils to live and to work together the greater is the significance of our educational success.

Any review may not be complete without a word about the strength and accommodation.

From 833 in the year 1946, when I took charge of the school, the strength of the institution has been increasing in leaps and bcunds to 1340 this year working in 29 sections. This is really a decrease in strength over last year. Four class rooms in the Northern wing of the school were taken up by the management to house the church and hence four sections were cut down. Yet every inch of space available in the remaining portion is best utilised and the school has been filled to its maximum capacity.

For want of proper class rooms a section in I Form is housed in the Hostel Boys' Dining shed and another section in Form II is located in the Science Laboratory and again in the absence of a proper meeting place we are forced to gather this august assembly this evening in our narrow class rooms. Permit me to quote again the words of the District Educational Officer, Madurai, " the accommodation and the open space available lay a severe limit over the strength of the school. The pupils exhibit great restraint and disci-

pline in movement and make work pleasant in this rather crowded school. The efficieny of the school is largely due to the team work of the teaching staff under the able guidance of the Headmaster"

With a view to relieve the over crowding in the school and to increase the accommodation, to meet the ever increasing demand for admission and to widen our activities for the benefit of our children we have launched out a bulding scheme at an estimated cost of Rs. 1,00,000. We have so for collected Rs. 15,000 and odd and we are still striving to reach the goal. I take this opportunity to express our grateful thanks to all the donors, Parents and Old boys and I appeal in general to the philonthropic persons to help us in our common cause of education.

CONCLUSTION :

It remains for me to express in the first place our deep gratitude to Almighty God for his His abundant blessing without which we could not have gone through this year in peace and tranquility. We pray and trust that His grace will ever abide with us.

This is the first occasion if I remember right, that the Bishop of Tranquebar has been invited to preside over the school day celebrations of this institution. Since 1907 when His Lordship first arrived in India a number of Missionaries have come, laboured in the field for a time and gone to continue their work in their homeland or elswhere while His Lordship has chosen to stay, to labour in this land of his adoption and in this vineyard of his choice and to receive eventually due recognition for his selfless labours by his elevation to the Episcopate. It is our earnest wish and prayer that he should live for many years to come so that this Tamil Nad may long enjoy the blessings of his spiritual ministrations. And it is further our expectation and hope that when His Lordship retires from his labours to crown his service in Tamil Nad with a period of well-earned rest, he will still devote himself to His service, guide and contribute substantially to the spiritual enrichment of our church. May our dreams come true!

It is my pleasant duty, next to express again my heart-felt thanks and gratitude to your Lordship for readily complying to come and preside over this evening's function in midst of your heavy responsible and strenous work and I fervently hope for your Lordships continued support and patronage. I thank all the parents, old boys and the generous hearted public for the encouraging manner in which they have responded to our invitation and graced this function.

Finally I thank you, Madam, very sincerely for kindly accepting our invitation to give away the prizes.

Janata Printers, Madurai-55.

இந்தியாவில் எஃகுத் தொழில்

[K. பழனியப்பன், IV-D]

ஆயிரக்கணக்கான டன்கள் எடையுள்ள ஒரு கப்பலிலிருந்து ஒரு சிறிய கைக்கடிகாரம் வரை அல்லது பெரிய பாலங்களைக் கட்டுவதற்கான கர்டர்கள் முதல் ஒரு சிறு திருகாணி வரை செய்வதற்கு எஃகு தேவையாக இருக்கிறது. ரெயில் எஞ்சின், மோட்டார் இன்னும் பலவித இயந்திரங்களைச் செய்ய எஃகு இன்றியமையாதது. ஒரு உழவருக்குத் தேவையான பல கருவிகள், ரெயில்வே தண்டவாளங்கள், வைத்தியர்கள் உபயோகிக்கும் பல உபகரணங்கள், இன்னும் அலமாரிகள், நாற்காலிகள், கத்திகள், பாத்திரங்கள் எல்லாம் எஃகினாலேயே செய்யப்பட்டவை. நாம் எங்கே பார்த்தாலும் எஃகினால் செய்யப்பட்ட ஒரு வஸ்துவை பார்க்காமலிருக்க முடியாது. ஆகையால் இவ்வளவு முக்கியமான எஃகின் உற்பத்தி நம் நாட்டில் எந்த நிலையில் இருக்கிறது என்பதை ஒவ்வொருவரும் தெரிந்து கொள்வது அவசியமாகும்.

நம் நாட்டின் எஃகுத் தொழிலின் சரிதம் 1911-ம் ஆண்டு ஜாம்ஷெட்பூரில் ஸர் ஜாம்ஷெட் ஜீ டாடா என்பவர் ஒரு இரும்பு எஃகுத் தொழிற்சாலையை அமைத்தபோது ஆரம்பமாயிற்று. அடுத்த ஆண்டில் இந்தியாவில் முதலாவதாக எஃகு உற்பத்தி செய்யப்பட்டது. 1918 முதல் உலக மஹா யுத்தம் ஆரம்பமாகவும் இத் தொழிற்சாலையின் உற்பத்தி பெருகி நம் நாட்டில் எஃகுத் தொழில் ஒரு சாசுவதமான அடிப்படையில் ஸ்தாபிதமானது. பிறகு 1920—21-ல் கல்கத்தா நகரில் Iron And Steel Company தோன்றிற்று.

பிற நாடுகளை விட இந்தியாவில் இரும்பு தயாரிக்க அதிகமான வசதிகள் உண்டு. இங்கிலாந்திலுள்ள இரும்பு தொழிற்சாலைகளுக்கு இரும்புத் தாது நார்வே, ஸ்வீடன், ஸ்பெயின் என்ற பிற நாடுகளிலிருந்து கப்பல் மார்க்கமாக இறக்குமதி செய்யப்படுகிறது. அமெரிக்க ஐக்ய நாடுகளிலுள்ள பென்ஸில் வேனியா தொழிற்சாலைகளுக்குத் தேவையான இரும்புத் தாது சுபீரியர் ஏரியின் மேற்குக் கரையிலிருந்து கப்பல் மார்க்கமாக சுமார் அறு நூறு மைல் எடுத்துச் செல்லப்படுகிறது. ஆனால் நம் நாட்டிலேயோ வென்றால் இரும்புத் தொழிலுக்கு வேண்டிய மூலப்பொருள்களாகிய இரும்புத்தாது, நிலக்கரி, சுண்ணாம்புக்கல் முதலியவை வங்காளம், ஒரிஸ்ஸா, பீஹார் இராச்சியங்களில் அடுத்தடுத்து கிடப்பதால் நம் நாடு மிகக் குறைந்த செலவில் இரும்பை உற்பத்திசெய்ய சாத்தியமாகிறது.

தென்னாட்டிலுள்ள இரும்புத் தொழிற்சாலையாகிய Bhadravathi Iron Works 1923-ம் ஆண்டில் மைசூர் இராஜ்யத்தின் முதல் மந்திரியாக இருந்தவரும், தொழிற்துறையில் முதுபெருங் கிழவர் எனப்படுவருமான Sir. M. விஸ்வேசுரய்யாவின் முயற்சியால் ஸ்தாபிதமாயிற்று ஆனால் வங்காளம், ஒரிஸ்ஸா, பீஹார் போன்று, நிலக்கரிச் சுரங்கங்கள் இல்லாத காரணத்தால், இங்கே நிலக்கரிக்குப் பதிலாக ஊது உலைகளில் எரிபொருளாக காடுகளிலிருந்து கிடைக்கும் விறகை உபயோகிக்கிறார்கள்.

இரும்பு உற்பத்தியில் நம் நாட்டைப் பிற நாடுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது 1952-ல் மேல் நாடுகளில் இரும்பு உற்பத்தியின் அளவு இவ்வாறு: அமெரிக்க ஐக்கியநாடுகள் 555 லக்ஷம் டன்கள்; சோவியத் ருஷியா 246 லக்ஷம் டன்கள், ஜெர்மனி 133 லக்ஷம் டன்கள்; பிரிட்டன் 105 லக்ஷம் டன்கள்;

(39ம் பக்கம் பார்க்க)

N. Jeyaraman VI F. Participated in Madras Olympic (53—54)

விஞ்ஞானம்

[ஆக்கல் க. அய்யாச்சாமி 5-ம் படிவம்]

விஞ்ஞானம் என்பது ஒரு மணற்கேணி. அதில் ஆராய்ச்சி என்னும் மண்வெட்டி கொண்டு தோண்டத் தோண்ட விஞ்ஞான நீர் சுரக்கும். ஆராய்ச்சி என்னும் கரத்தில் விஞ்ஞானம் என்ற அன்னத்தை எடுக்க எடுக்க பன்மடங்காகும். விஞ்ஞானத்தின் பிறப்பிடம் சிந்தனை. விஞ்ஞானமானது காரிருளிலே கரைகாணுது தவிக்கும் கப்பலோட்டிக்கு வழிகாட்டும் கலங்கரை விளக்குப்போல் நல்வாழ்க்கைவாழ உலக மக்களுக்கு வழிகாட்டியாக இலங்குகின்றது.

அடுப்பிலுள்ள "கெட்டிலே" நன்ருக சூடாக்கினல் "கெட்டிலி"லுள்ள தண்ணீர் நனருகக் கொதித்து ஆவிகிளம்புகிறது. ஆவியின் அழுத்தம் அதிகமாவதால் தட்டு தூக்கி எறியப்படுகிறது. "கெட்டிலி"லுள்ள தட்டு ஏன் தூக்கி எறியப்பட்டது? இது தான் அடுப்பறையிலிருந்த ஜார்ஜ் ஸ்டீபன்ஸனுடைய கேள்வி. சிந்தித்தான், சிந்தித்ததின்பயனுக நீராவியின் பெருமழுத்தத்தைக்கொண்டு எந்திரத்தை இயக்கி ஓடச் செய்யலாமென அறிந்தான். இந்தத் தத்துவத்தைக் கொண்டு தான் பின்னல் இரயில் எஞ்சினைக் கண்டுபிடித்தான் ஜார்ஜ் ஸ்டீபன்ஸன்.

இயற்கைக் காட்சியைக் காணவந்தவனெருவன் அருவியின் வேகத்தைப் பார்த்தான். பார்வையானது சிந்தனையைத் தூண்டிற்று. சிந்தித்தவன் எண்ணக் கடலிலே "இவ்வருவியின் வேகத்தைக் கொண்டு மின் சக்தி எடுக்கலாமோ"? என்ற அலைகள் மோதின இப்படி நீரின் வேகத்தைக்கொண்டு எடுக்கப்பட்ட மின் சக்தியே நமது இல்லத்துக்குக் கொண்டுவரப் படுகிறது. இம் மின் சக்தியை நீரின் வேகத்திலிருந்து உண்டாக்க வழிகாட்டியவர் மைக்கல் பாரடே ஆவார். ஒரு நாடு நல்ல நிலையில் முன்னேறுவது. அது உற்பத்தி செய்யும் மின்சக்தியை பொறுத்தது.

"ஓர் அறையில் உள்ள பித்தானை அழுத்தியவுடன் மற்ருெரு அறையில் மின்சார விளக்குப் பிரகாசமாக எரிகிறது. அதுபோல வேருெரு இடத்தில் உள்ளவனுக்கு பேச்சு ஏன் கேட்கக்கூடாது? என்று கிரஹாம்பெல்லின் சிந்தனை கேட்டது. அவற்றின் தத்துவத்தைக்காண அவர் அறிவு என்ற கடலிலே மிதக்கும் சிந்தனையெனும் கப்பல் தட்டிலே அமர்ந்துகொண்டு ஆராய்ச்சி செய்தார். அதனுல் சிந்தனையின் சிகரம் கிரகாம் பெல், டெலிபோனைக் கண்டுபிடித்தார், ஊரிலுள்ள வீடுகள் தீப்பற்றிக்கொண்டால் டெலிபோன் இல்லாமல் நெருப்பணைக்கும் படையினரைச் சீக்கிரம் கொண்டுவர முடியுமா? சிந்தித்துப்பாருங்கள் விஞ்ஞான்ம் செய்யும் நன்மைகளை!

"கம்பிகள் ஒன்றும் இணைக்கப்படாமல் ஒரு தேசத்திலிருந்து பேசும் பேச்சை வேருெரு தேசத்திலுள்ளவனுக்கு ஏன் ஈதர் மூலம் அனுப்பக்கூடாது? என்று தன் சிந்தனையைக் கேட்டார் குக்லியல் மோ– மார்க்கோனி. சிந்தனையும் பகர்ந்தது அனுப்பலாமென்று. பலர் இச்சிந்தனைச் செல்வனை பைத்தியகாரன் என்று கேலி செய்தனர். அதை பொருட்படுத்தாது இடைவிடாது தம் உழைப்பினுல் அவர் வானெலியைக் கண்டு பிடித்தார்.

"குளோரபாரம்" இல்லாத பண்டைய நாட்களில் மருத்துவர் ஒருவனுக்கு இரணசிகிச்சை செய்யும்பொழுது அந்நோயாளி புழுவாய்த் துடிதுடித்தான். இரணசிகிச்சை செய்யும் காட்சியைக் கண்டு மனம் வாட்டமுற்ருர் ஒருவர். நோயாளியின் வேதனையைப் போக்க வேண்டும்; வலியின்றி இரணசிகிச்சை நடைபெறவேண்டும் அதற்கோர் வழி வகுக்க வேண்டுமென்று நினைத்து ஸர்ஜேம்ஸ் சிம்ஸன் சிந்தனைக்களத்தில் புகுந்து ஆராய்ச்சியெனும் ஆயுதத்தைக் கரத்தில்எடுத்து 'இரணசிகிச்சை வலி' என்னும் அரக்கனேடு போராடி வெற்றிக்கொடி நாட்டி ஜெய பேரிகை கொட்டினர். அவ்வெற்றிதான் "குளோரபாரம்" என்னும் சாதனமாகும். நோயாளிக்கு விஞ்ஞானம் கொடுத்த பரிசு குளோர்பாரம். இவரைப்

போலவே பல இடுக்கண்பட்டு ரண்ட்ஜன் என்பவர் எக்ஸ்ரே கண்டுபிடித்தார். சிந்தனைச் சிற்பிகள் கொடுத்த இவ்விரண்டும் மருத்துவ மனைகளிலே மிக்க பயனை அளிக்கின்றன.

"வான வீதியிலே பறக்கின்ற கருடனைப் போல் ஏன் பறக்கக்கூடாது? என்று நினைத்த விஞ்ஞானி சிந்தனையெனும் வானவீதியிலே சஞ்சரித்தான். ஆகாயக் கப்பலைக் கண்டு பிடித்தான் மனிதன். ஆனால் அவற்றில் பல குறைகள்இருந்தன. அதைச்செம்மைப்படுத்தி அதிக வேகமாகச் செல்லக்கூடிய ஆகாய விமானத்தை "ரைட்" சகோதரர்கள் வெகுதூரம் வரை ஓட்டிக் காண்பித்தார்கள். அமெரிக்காவைச் சேர்ந்த ஆர்வில் ரைட்டும் வில்பர் ரைட்டும் எவ்வளவு நாள் சிந்தித்து இவ்விமானத்தைக் கண்டுபிடித்திருக்கமாட்டார்கள்.!

அணு குண்டின் அழித்தல் ஆற்றலைப் பற்றித்தான் நீங்கள்கேள்விப்பட்டிருப்பீர்கள். ஆனால் விஞ்ஞானிகள் அந்த அணுவின் சக்தியை ஆக்கவேலைக்கு பயன்படுத்தும்படி இப்போது சிந்தனை செய்துகொண்டுள்ளார்கள்.

நாமும் சிந்தனை செய்து வாழவேண்டும். மேல்நாட்டினைப்போல் வறுமைப் பேய் விஞ்ஞான விடி வெள்ளியைக்கண்டு ஓடிவிடும். செக்குமாடென உழைத்தபோதும் சிந்தித்து வளருவீர்! விஞ்ஞானமெனும் ஆராய்ச்சி ஆயுதத்தைக் கரத்தில்கொண்டு அறியாமை என்ற அரக்கனை வேரற்ற மரம்போல வெட்டிச்சாயுங்கள். களவு, பொய், சூது முதலிய நச்சுக் கொடிகளை அறுத்தெரியுங்கள். அதற்குப்பதிலாக சிந்தனை யெனும் வண்டல் படிந்த நிலத்திலேஆராய்ச்சிஎன்ற மல்லிகைச் செடியையும் விஞ்ஞானமெனும் ரோஜாச் செடியையும் அறமெனும் முல்லைக்கொடியையும் நட்டு பகுத்தறிவு உரம் போட்டு உழைப்பு எனும் நீர் பாய்ச்சி வளரவிடுங்கள் அதனால் நமது வாழ்க்கைவளம் பொங்கும்! விஞ்ஞானம் வளரும்.

(38ம் பக்க தொடர்ச்சி)

பிரான்ஸ் 95 லக்ஷம் டன்கள் ஆனால் இந்தியாவோ 18 லக்ஷம் டன்கள் மட்டும் தான். இந்த நிலைமையை நீக்க இந்திய சர்க்கார் 1946-ம் ஆண்டிலேயே Iron and Steel Industry Panel (Major) என்ற ஒரு கமிட்டியைஅமைத்தது. அந்த கமிட்டி நிலைமையைப் பரிசிலனை செய்து, சுமார் ஏழு வருட காலத்தில் எஃகு உற்பத்தியை சுமார் 30 லக்ஷம் டன்கள் ஆக்குவதற்கான யோசனையைக் கூறிற்று.

நம்நாட்டின்தொழில் முன்னேற்றத்திற்கு மேல் நாட்டுத் தொழில் நிபுணர்கள் உதவியளிக்க முன்வந்துள்ளார்கள். உலகப்பிரசித்தி பெற்ற ஜெர்மனியை எஃகு ஸ்தாபனமாகிய Krupps கம்பனியாரின் நிபுணர்களைக் கொண்டு ஓரிஸ்ஸா இராஜஜியத்தில் Rourkala என்ற இடத்தில் Hindustan Steels Ltd., என்ற தொழிற்சாலையை ஸ்தாபிக்க நம் அரசாங்கம் தீர்மானித்துள்ளது. சோவியத் ருஷியாவிலுள்ள நிபுணர்களுடன் நம் அரசாங்கம் சமீப காலத்தில் ஒரு ஒப்பந்தம் செய்துள்ளது. அதன்படி மத்திய பிரதேசத்தில் வருஷத்திற்கு 10 லக்ஷம் டன் எஃகு உற்பத்தி செய்யும் தொழிற்சாலை இன்னும் சுமார் மூன்று ஆண்டுகளில் உருவாகும்.

இம்மாதிரியானபுதுத்திட்டங்களினால் நம் நாட்டில் எஃகு உற்பத்தி அதிகரிப்பது மட்டுமின்றி,பல இந்தியர்களுக்குத்தொழில் நுட்பத்தைக் கற்றுக்கொள்ள வசதியும் ஏற்படுகிறது. ஆகையினால் நம் நாட்டின் பொருளாதார நிலைமை சீரடைவது மல்லாமல் தொழில் துறையில்மேல் நாட்டு நிபுணர்களுக்கு நம் நாடு அடிமையாக இருக்கவேண்டிய நிலை நீங்கி, நம் நாட்டிலேயே பல நிபுணர்கள் தோன்றி உண்மையான சுதந்திரத்துடன் நம் நாடு முன்னேறமுடியும்.

"புதுமைக் கவி பாரதி"

[எஸ். பாண்டியன் IV-A]

வெண்பாவில் புகழேந்தி! சிலேடையில் காளமேகம்! கற்பனையில் கம்பன்! காவியத்தில் காளிதாஸன்! உலாவிற்கு ஒட்டக்கூத்தன்! மூதுரைக்கு ஔவை!

ஆம்; மூச்சு விடுமுன்னே முன்னூறு கவி பொழியும் மோனை முத்தமிழ், யானைக் கவிஞர்கள் மும்மதம் பொழிகின்ற. எத்தனை எத்தனையோ கவிஞர்களை ஈன்றெடுத்து பெருமை பூண்டது தமிழகம்;

ஆனால் கவிபாடி. பெருமை பெற்று, கை நிறையப் பொருள் பெற்று கவிராஜ பண்டிதராய், தொழில் நடத்திவந்த புலவர் பெருமக்கள் பலர் உண்டு.

கவிஞன் மட்டுமல்ல, ஒப்பற்ற அறிஞன்! பாவலன் மட்டுமல்ல, பற்றற்ற ஞானி! புலவன் மட்டுமல்ல அடிமை புரையோடிய சமுதாயத்திற்கு சிறந்த மருத்துவன். நாவலன் மட்டுமல்ல, நாட்டு மக்களின் நல்லாசிரியன்! அவன்தான் புரட்சிக் கவி சுப்பிரமணிய பாரதி;

அந்த ஒப்பில்லாத சமுதாயத்திலே, இந்திய மக்களின் தாரதரத்தை விளக்குகிறார்:—

"எல்லோரும் ஓர் குலம்!
எல்லோரும் ஓர் இனம்!
எல்லோரும் ஓர் நிறை!
எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள்"

எனக் கூறுகிறார்.

அன்பைப்பற்றி விளக்குகிறார் பாரதி:—

"அன்பென்று கொட்டு முரசே—அதில்
ஆக்க முண்டாமென்று கொட்டு முரசே"

இவ்வாறு அன்புக் கொடியை உயர்த்திப் பிடிக்கிறார்.

"ஊருக்கு நல்லது சொல்வேன்—எனக்கு
உண்மை தெரிந்து சொல்வேன்"

என்று ஆரம்பித்து பச்சைக் குழந்தைக்கும் புரியவைக்கும் அருமையான பாணியிலே உலக முழுவதும் ஒன்றித்து அமைதியில் திளைக்க இன்றியமையாத பல உண்மைகளைக் கூறுகிறார்.



HOUSE CAPTAINS 53—54

" பெற்ற தாயும் பிறந்த பொன்னுடும்
நற்றவ வானினும் நனி சிறந்தனவே"

என்ற பாட்டிலே திளைத்தவரான பாரதி தேசாபிமானம் என்ற ஆவேசத்திற்கு உயிர் கொடுத்தார்; மின்சார மேற்றினுர்.

"சொந்த நாட்டிற் பிறர்க்கடிமை
செய்தே துஞ்சிடோம் இனி அஞ்சிடோம்"

என்று இடி முழக்கம் செய்த பாரதி நாலு திசையும் சுதந்திர நாதமெழுகவே, நரக மொத்த அடிமை வாழ்வு நைந்து கழிகவே என்று இசைத்தார். பாரதி பார்க்கிருர்; தன் தாயகத்து மக்களைப் பார்த்துத் துடித்துத் துக்க கண்ணீர் வடிக்கிருர். அவர் "நெஞ்சு பொறுக்குதில்லையே, இந்த நிலை கெட்ட மனிதரை நினைந்துவிட்டால்" என்று வேதனையுற்று பொங்கிப் பெரு மூச்செரிகின்ருர், பிறந்த பொன்னுட்டின் மக்களின் நிலையைக் கண்டு,

தமிழ் நாட்டின் தேசியக் கவி பாரதி என்று நாம் குறைத்து மதிப்பிடுவதைக்காட்டிலும் "உலக மகா கவி பாரதி" என்ருல் இந்த உலகில் அதை எவரும் மறுக்க முடியாது.

இந்த வீரக் கவிஞனின் வீரவரலாற்றை காலக் கழுகு கொத்திச் சென்று ஆண்டுகள் முப்பத்தி மூன்று முடிவடைகின்றன.

உடலோடு கூடிய பாரதி நம்மிடையே இல்லை; ஆனுல் அவர் ஊட்டிய "விடுதலை ஆர்வம்" நமது நெஞ்சிலே உறைந்திருக்கிறது.

பாரதியைப்போல், காலப் போக்கின் கதியை, சரித்திரப் போக்கை, உன்னிப்பாகக் கவனித்து, மனித சமுதாயத்திற்காகப் பாடு பட்ட பெருங்கவிஞன் எவருமில்லை என்று கூறலாம்.

வாழ்க பாரதி நாமம் !!

Blue House runner-games & sports 53–54

"திருக்குற்றால மகிழ்வுச் செலவு"

[P. N. தர்மகிருட்டினன், V-A]

மதுரை ஐக்கிய கிறிஸ்தவ உயர்நிலைப் பள்ளியின் மகிழ்வுச் செலவு, ஆகஸ்டு மாதம் 27, 28, 29, 30 தேதி ஆகிய நாட்களில் நடைபெற்றது. சென்ற இடம் திருக்குற்றாலம்.

பிரயாணக் கூட்டம் 27-8-54-ந் தேதி இரவு மதுரையை விட்டுப் புறப்பட்டு சுமார் 350 மாணவர்களும், பல ஆசிரியர்களும், தலைமை ஆசிரியரும் உள்பட 28-8-54 காலை 9மணிக்கு குற்றாலம் சென்றது. அன்று காலை உணவை முடித்தபின் மாணவர்கள் தங்கள் தங்கள் தொகுதித் தலைவருடன் வட அருவியினை அடைந்து அங்கு குளித்துவிட்டு பின்னர் மதியம் உணவினை உண்டு, மாலை நேரத்தில் அருகிலுள்ள பூங்காவிலும் மலையின் சரிவிலும் விளையாடி இன்புற்றார்கள்.

29-8-54 காலை மாணவர்கள் தங்களின் தலைவர்களுடன் ஐந்தருவிக்குச் சென்று குளித்தும், அவண் உள்ள காட்சிகளை கண்டும் மகிழ்ந்தார்கள். பிற நேரங்களில் சிறு சிறு கூட்டங்களாகச் சென்று மலைவனப்புக் காணச் சென்றார்கள். அன்று இரவு தலைமையாசிரியரின் தலைமையின் கீழ் மாணவர்கள் பாட்டு, நடிப்பு, மாறு வேடம் முதலியன மேற்கொண்டு பிற மாணவர்களையும் ஆசிரியர்களையும் மகிழ்வித்தார்கள். அவ்விளையாட்டில் ஆசிரியர்களும் கலந்துகொண்டு, நடித்தும் பாடியும் காண்பித்தார்கள். பின்னர் தலைமையாசிரியர் தமது முடிவுரையில் மாணவர்களின் நடிப்பு, பாட்டுத் திறமையையும் புகழ்ந்து பேசினார். அன்று இரவு 10 மணிக்கு மாணவர்கள் படுக்கைக்குச் சென்றார்கள்.

30-8-54 காலை மாணவர்கள் அணியணியாக புறப்பட்டு தேன் அருவி, செண்பக அருவி, சிற்றருவி, புலி அருவி, ஏலக்காய்த் தோட்டம் முதலியவைகளைப் பார்த்துவிட்டு தங்களின் உறைவிடம் திரும்பினார்கள். பின்பு மதியம் உணவினை முடித்துக்கொண்டு குற்றாலத்தைவிட்டுப் புறப்பட்டு தங்கள் தங்கள் தலைவர்களின் பின்னால் தென்காசியை அடைந்து அங்கு மாலை 5-20க்கு புறப்படும் புகைவண்டியில் புறப்பட்டு மதுரை வந்துசேர்ந்தார்கள். மாணவர் மகிழ்வுச் செலவு இனிதே முடிவுற்றது.



53 – 54 Red House games & sports winners



குற்றாலம்-தென்காசி சாலையில் அணா 3 க்கு வண்டி



நாங்கள் தங்கிய பாறையடி பங்களா

CONNEMARA PUBLIC LIBRARY
21 NOV 1956
MADRAS

சமையல் சாமான்கள் சரிதானா?



ஒரு பையனுக்கு இங்கு இடமுண்டு—திரு. தானியேல்ராஜ்

உணவுக்குப்பின் குற்றாலம் அருவியில்



புலியருவில் தமிழ் ஐயாதன் குழுவுடன்.

2 NOV 1956
MADRAS



ஐந்தருவியில் எங்கள் ஆனந்தம் !!



குற்றாலத்தில் எங்கள் கிருஷ்ணன் !

"அறிவுப் போட்டி"

(சிறு நாடகம்)

[மு. சுப்பிரமணியன் V-E]

முன்னுரை;—[நாட்டில் அறிவு வளரவேண்டும். அன்பு கனிய வேண்டும். அறிவை வளர்க்கும் நல்லாசிரியர்களைப் போற்ற வேண்டும். இதை எடுத்துக்காட்ட இச்சிறு நாடகம்]

காட்சி 1

இடம்:— இன்பபுரி நாட்டின் கொலு மண்டபம்

இனம்:— அரசன், அமைச்சர், இன்பபுரி நாட்டின் எதிர்கால இளவரசன் இமயவர்மன்

(காவற்காரன் ஓடி வருகிறான்)

காவற்காரன்;— அரசே! அன்பு தோய்ந்த பார்வை! அரும்பும் புன்னகை, அழகான பேச்சு, தவஞானிபோல் தெரிகிறார் ஒருவர். தங்களைப் பார்க்க வேண்டுமாம்.

அரசன்;— அப்படியா!...... அழைத்துவா!

இமயவர்மன்:— வேண்டாம் தந்தையே! வேண்டாம். வேடம் தரித்த வேங்கையாக இருக்கும். அறிஞன்போல் வந்து அரச குடும்பத்தையே அழித்துவிடுவார் சிலர். தவஞானிகளின் தந்திரத்தால்தான், தந்தையே! தமிழ் நாட்டின் வீரமே தரை மட்டமாக்கப்பட்டது!

அரசன்:— மகனே! அப்படியல்ல! நம் நாட்டில் எத்தனையோ மகான்கள் உளர். திருவள்ளுவர், இளங்கோ, முதலியோர் தவக் குன்றுகள் அல்லவா!
(இமயவர்மன் கூறிய இந்தக் கொடிய வார்த்தைகளை கேட்டுக்கொண்டே அறிவுத்தேவர் வருகிறார்)

அரசன்:— வருக! வருக!!

அறிவுத்தேவர்:— மன்னவா! மறையட்டும் உன் நாட்டின் மடமை, பெருகட்டும் உன் பெருமை, (கடைக்கண்ணால் அறிவுத்தேவர் இமயவர்மனை பார்த்துக்கொண்டே) இவர் யாரோ?

அரசன்;— இன்பபுரியின் எதிர்கால இளவரசன், என் புதல்வன் இமயவர்மன்.

அறிவுத்தேவர்:— ஓகோ... (இமயவர்மனைப் பார்த்து) ஓங்கட்டும் உன் வீரம், ஒழியட்டும் உன் மனத்து இருள்.

அரசன்:— அமருங்கள் சுவாமி ஆசனத்தில் (அறிவுத்தேவர் அமருகிறார்)

அரசன்:— சுவாமி தாங்கள் யார்?

அறிவுத்தேவர்;— சுருக்கமாகச் சொல்லப்போனல் சுகத்தை விரும்பாதவன். சுடுகின்ற தீயைத் தீண்டுகின்றவன்.

அரசன்:— புதிர் போடுகிறீர்களே! சுவாமி.

அறிவுத் தேவர்:— புதிரல்ல பூவாளும் வேந்தனே! புத்திசாலிகளைப் புடம்போட்டெடுக்கும் புது மார்க்கத்துடன் வந்திருக்கிறேன்.

அரசன்:— அடியேன் அறிவுக்கு எட்டும்படி எளிய நடையில் தெளிவாகத் தெரிவியுங்கள் சுவாமி!

அறிவுத்தேவர்:— அரசனே! அறிவுப் போட்டி ஒன்று நடத்த அகம் துடித்தது. அதனுல் உம்மை அணுகி வந்தேன் அனுமதி கோர.

அரசன்:— தடை ஏதுமில்லை சுவாமி! தந்தேன் அனுமதி.

அறிவுத்தேவர்:— அரசனே! அந்தப்போட்டியை உன் அரண்மனையிலே நடத்தவேண்டும். இன்பபுரி நாட்டிலே நடக்கப்போகும் இந்த இணையற்ற, அறிவுப் போட்டியிலே, துள்ளிவிளையாடும் பள்ளிச் சிறுவர்கள் முதல், துவண்டுகிடக்கும் கிழவர்கள்வரை கலந்துகொள்ளலாமென்று துரிதமாகப் பறைசாற்றச் சொல். நாடெங்கும் பறை சாற்றப்படட்டும். நாளைக்குப் போட்டி ஆரம்பமாகட்டும்.

அரசன்:— ஆகட்டும் சுவாமி (சபை கலைகிறது)

(திரை)

காட்சி 2.

இடம்:— (இன்பபுரியின் தெரு)
(மக்கள் மகிழ்ச்சியுடன் கூடியிருக்கிறுர்கள்.)

பறை சாற்றுபவன்:— டம்...டம்...டம்...டம் இதனுல் இன்பபுரி நாட்டு மக்களுக்கு தெரிவிப்பது என்னவென்றுல், இன்று இன்பபுரியின் அரண்மனையிலே நடக்கப்போகும் அறிவுப் போட்டியில் பள்ளிச்சிறுவர்கள் முதல் பாராளும் வேந்தர்கள் வரை பாரபட்சமின்றி பங்குகொள்ளலாம். போட்டியிலே வெற்றியடைவோருக்கு ஆயிரம் பொன். ஆகவே அரண்மனையில் நடக்கப்போகும் அறிவுப் போட்டியில் கலந்து கொள்ள அறிவுள்ளவர்கள், ஆர்வமுள்ளவர்கள் அச்சமின்றிக் கலந்துகொள்ளலாம்

இப்படிக்கு,

இன்பபுரி நாட்டின் இன்றைய மன்னன்,

மகேந்திரவர்மன்.

[மக்கள் இந்தப் பிரகடனத்தைக்கேட்டு மகிழ்ச்சியுடன் கலைந்து இல்லம் ஏகினுர்கள். அன்று இன்பபுரியில் இதைப்பற்றியே பேச்சு. கும்பல் கும்பலாக மக்கள் போட்டியைப் பற்றியே பேசிக்கொண்டு இருக்கிறுர்கள்.]

(திரை)

காட்சி 3.

இடம்:—இன்பபுரியின் ஒரு பகுதியில் இருக்கும் ஒரு சிறு வீடு.

(ஒரு மாணவன் தன் தாய்தந்தையர்களை வணங்குகிறான்.)

மாணவன்:— தந்தையே! வணங்குகிறேன். அரண்மனையில் நடக்கப்போகும் அறிவுப் போட்டியில் நானும் கலந்துகொள்ள அனுமதிதாருங்கள்.

தந்தை:— தமிழ் நாட்டின் வீரம் தழைத்தோங்கட்டும். தனயனே உன் அறிவைத் தரணி கண்டு வியக்கட்டும். சென்றுவா!

மாணவன்:— அன்னையே, ஆசிதாருங்கள்!

தாய்:— பலநாட்டறிஞர்கள் கலந்துகொள்ளும் பகுத்தறிவுப் போட்டியிலே, பயமின்றிக் கலந்துகொள்ளப்போகும் என் பாலகனே! உன் அறிவைக் கண்டு பாரோர் புகழட்டும். பார்ப்போர் சிந்திக்கட்டும். அன்பு மகனே உனக்கு அறிவைப் புகட்டி அச்சத்தை யோட்டி ஆளாக்கி, அறிவுப்போட்டியில் கலந்துகொள்ள உனக்கு ஆற்றலளித்த உன் குருவை வணங்கிச் சென்று வாடா, என் செல்வமே!

(மாணவன் அவர்களிடம் விடைபெற்றுத்தன் ஆசிரியரின் வீடுநோக்கி விரைந்துசெல்கின்றான்.)

(திரை)

காட்சி 4.

இடம்:—ஆசிரியர் வீடு

(ஆசிரியர் தன் மாணவன், தன் வீட்டை நோக்கி திடீரென்று வந்ததால், திகைப்படைந்து, அன்பு தோய்ந்த குரலில்)

ஆசிரியர்:— என் அருமை மாணவனே! என் அகம் நோக்கி வந்ததின் நோக்கம் என்ன?

மாணவன்:— அரசவையில் நடக்கப்போகும் அறிவுப்போட்டியில் கலந்துகொள்ளப் போகிறேன். அறிவைப் போதித்த குருவினிடம், ஆற்றலளித்த ஆசிரியரிடம், ஆசி பெறவே வந்திருக்கிறேன். என் மீது கிருபை கூர்ந்து, எனக்கு அனுமதியும், ஆசியும் தர விருப்புகிறேன்.

(மாணவன் ஆசிரியரின் பாதங்களில் தாழ்ந்து வணங்குகிறான்.)

ஆசிரியர்:— அன்பிற்குரிய மாணவா! வீரனாக, விவேகியாகப் போய் வா, கடவுள் உனக்கு உயர் ஞானத்தை அருள்வாராக!

(மாணவன் வணங்கிச் செல்கிறான்)

(திரை)

காட்சி 5.

இடம்:— இன்பபுரி அரண்மனை.

இருப்பவர்கள்:— அரசன், அறிவுத்தேவர், அமைச்சர், மற்றும் பல நாட்டறிஞர், அவையோர், இளம் மாணவன்.

(அறிவுத்தேவர் மேடையில் ஏறுகிறார். கரகோஷம் காதைப் பிளக்கிறது)

அறிவுத்தேவர்:— அன்பிற்கும் அறிவுக்கும் எடுத்துக்காட்டாக உள்ள அரசர் பெருமானே! அறிஞர்களே! உங்கள் எல்லோருக்கும் என் வணக்கம். இங்கே நடக்கப்போகும் அறிவுப்போட்டியில் வெற்றிபெறுபவருக்கு இன்பபுரி மன்னர் மஹேந்திரவர்மர், ஆயிரம் பொன் பரிசு வழங்க முன்வந்திருக்கிறார். இப்பொழுது என் கேள்வியை விடுகிறேன்.

(அவையில் பூர்ண அமைதி நிலவுகிறது)

அறிவுத்தேவர்:— நாட்டிற்கு நாவலரையும், பாவலரையும் அளிப்பது யார்?

அவையில் ஒருவர்:— அரசர்.

அறிவுத்தேவர்:— அரசர் குடிமக்களுக்கு நீதியை அளிப்பவர். ஆகவே, விடை சரியில்லை.

மற்றொருவர்:— மக்கள்.

அறிவுத்தேவர்:— மக்களில் மாக்களும் உளர். எவ்வகை மக்கள், அறிவு வளர்ச்சியை உண்டாக்குபவர் என்பது நும் விடையில் கிடைக்கவில்லை. ஆக விடை பொருத்தமில்லை.

(பலபேர், பலவிதமான விடைகளை அளிக்கிறார்கள். அவை ஒன்றும், அறிவுத்தேவரின் கேள்விக்குப் பொருத்தமில்லாமல் இருக்கின்றன. கடைசியாக, அந்த இளம் மாணவன் எழுகிறான். அவையில் அமைதி நிலவுகிறது.)

மாணவன்:— அறிவுமிக்க நாவலர்களையும், பாவலர்களையும், நாட்டுக்களிப்பவர், நல்லாசிரியர்களே. அவர்கள் தான் நாட்டின் அறிவுக்கு ஆணிவேர். ஆசிரியர்களைப் புறக்கணித்தநாடு, அறம், அறிவு, பொருள், இன்பம் இவற்றில் முன்னேற்றமடையாது.

அறிவுத்தேவர்:— சபாஷ்! மாணவனின் கருத்து மிகப் பொருத்தமானது. அதைச் சிறிது விளக்காயோ?

மாணவன்:— அவையோரே கேளுங்கள்! பெற்றோர்கள், தங்கள் குழந்தைகளைப் பெற்றெடுத்து, வளர்க்கிறார்கள். பின்பு குழந்தைகள் தக்க வயது வந்தவுடன் பள்ளிக்குச் செல்கிறார்கள். அங்கு, அவர்கள், ஆசிரியர்களின் கீழிருந்து, பல துறைகளில் அறிவை வளர்க்கிறார்கள். பல நாட்டுப் பண்புகளை அறிகிறார்கள். இயற்கையின் வனப்புகளைக்கண்டு உணர்ச்சி பெறுகிறார்கள். இதயம் பூரிக்கிறார்கள். பூரிப்பின் வேகத்தில் அவர்கள் உள்ளத்திலிருந்து பொங்கி வழியும் கற்பனைக்குப் பொலிவு கொடுக்கிறார்கள். பொங்கி வழியும் கற்பனைக்கு பொலிவு கொடுக்கும் அளவுக்கு அவர்களுக்கு அறிவு போதிக்கிறவர்கள் நல்லாசிரியர்களே. ஆகவே நாட்டிற்கு நாவலரையும், நல்லதோர் பாவலரையும் அளிப்பவர் நல் ஆசிரியர்களே!

அரசன்:— பல நாட்டு அறிஞர்கள் வந்தும் பயனில்லை. பள்ளிச் சிறுவன் பரிசைப் பெறுகிறான் அவனுக்கு அறிவுப் போட்டியின் சார்பாக அன்புதோய்ந்த வணக்கத்தை அகக்கனிவோடுதெரிவித்துக்கொண்டு இந்தஆயிரம் பொன்னையும்வழங்குகிறேன்.

(பரிசைப்பெற்ற மாணவன் அவையோருக்குத் தன் நன்றியைத் தெரிவிக்கின்றான்.)

மாணவன்:— இன்பபுரி மன்னவருக்கும், இன்னுமுள்ள மக்களுக்கும் இணக்கமுடன் வணக்கம் பல. இன்பபுரியில் நடத்திய இந்த அறிவுப் போட்டியில் வெற்றியடைந்தேன். வெற்றியடைந்த எனக்கு அரசர் ஓராயிரம் பொன்னை வெகுமதியாக அளித்திருக்கிறார், என் அறிவைப் பாராட்டி. பார்ப்போரும் பாரோரும் பாராட்டுமளவுக்கு எனக்கு அறிவைப் போதித்த என் ஆசிரியரைப் பாராட்ட இங்கே ஆட்களே இல்லை. இப்படித்தான் இன்றைய மாணவர்களும் இருந்து வருகிறார்கள். இது தவறு. உலகிலே உதித்த நம்மை உயர்ந்தவனாக்கி உலகோருக்கு காட்டும் அந்த உத்தமரை வணங்கி வாழ்த்தி வாயாரப் பாராட்டவேண்டும் என்கிறேன். ஆசிரியரை வணங்குவதால் நம் ஆஸ்தியோ அந்தஸ்தோ அழிந்து விடாது. ''அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.'' அதைப் போதிப்பவர் ஆசிரியர். கற்றோருக்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு. இந்த வார்த்தைகள் இன்னும் இந்த உலகிலே வாழ்கிறது என்றால் அது உபாத்தியாயர்களால் தான். ஆகவே நல்லாசிரியரை ஆயிரம் முறை வணங்கென்று இன்றைய மாணவ உலகத்தை உற்சாகத்துடன் கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

(மாணவன் தன் குறுகிய உரையை முடித்துவிட்டுப் பரிசுடன் அரண்மனையை விட்டுவெளியேறுகிறான்.)

குருவைப் பணிந்திடடா!
குணத்தை பெற்றிடடா!
அறிவைப் போற்றிடடா!
அறத்தை வளர்த்திடடா!

(திரை)

முடிவு.

சொல்லுங்கள் பார்ப்போம்?

விடை

(1) 64 கனிகள்

(2) மூத்தவனுக்கு:—

2 படி கறக்கும் பசு 4 $\frac{1}{4}$ படி கறக்கும் பசு 5 $\frac{3}{4}$ படி கறக்கும் பசு 1

2வது மகனுக்கு:—

2 படி கறக்கும் பசு 4 $\frac{3}{4}$ படி கறக்கும் பசு 1 $\frac{1}{4}$ படி கறக்கும் பசு 5

3வது மகனுக்கு:—

2 படி கறக்கும் பசு 2 $\frac{3}{4}$ படி கறக்கும் பசு 8

(3) பூ 2 வண்டு 3

"சிந்தையினிலே கொள்க!"

(அ. சோமசுந்தரம், ஐந்தாம் படிவம் இரண்டாம் பிரிவு)

1. பழமை என்று மடமையைப் போற்றலும், புதுமை என்று செம்மையைத் தூற்றலும் அறிவுடைமையாகா. இக்குணமுடைய நாடு ஒரு போதும் வளர்ச்சியுறாது. கருத்து வேற்றுமைக்கும், பொருந்திய புதுமைக்கும் இடந்தர இடந்தர நாடு வளரும்.

—திரு. வி. கல்யாணசுந்தர முதலியார்

2. வயிற்றைப் போன்றதே மனமும், அதிலே நீ எவ்வளவு திணிக்கிறாய் என்பது முக்கியமல்ல, அது எவ்வளவு ஜீரணித்துக் கொள்கிறது என்பதுதான் முக்கியம்.

—ஆல்பர்ட் ஜோ

3. பணம் அவசியமான சாதனம், ஆனால் அச்சாதனத்தை உபயோகிக்கத் தெரிய வேண்டும். உலக முழுவதையும் அடைந்தாலும் தன்னை இழந்து விட்டால் எவ்வளவு பணமிருந்தாலும் அவன் வாழ்க்கை பாழே.

—லூயிஸ் ஸ்டிவன்சன்

4. பழங்காலத் தத்துவங்கள் இந்த காலப்பிரச்சனைகளைத் தீர்ப்பதற்குப் போதுமான ஆற்றலுடையவை அல்ல, ஏனெனில் இக்காலப் பிரச்சனைகள் புதியவை, எனவே நாம் புதியதாகச் சிந்தித்து புதுமுறையில் தான் பணியாற்றியாக வேண்டும்.

—ஆப்ரகாம் லிங்கன்

5. மனிதன், வாழ்க்கையில் வளர்ச்சியடைய வேண்டுமானால் அவனுக்கு ஏதாவது எதிர்ப்பு இருந்து கொண்டிருக்க வேண்டும். காற்றாடிகள் காற்றை எதிர்த்துக் கொண்டுதான் மேலேறுகின்றன.

—மாட்டா

6. வெறும் நம்பிக்கையால் பலன் கிடைக்காது பாவம் கழியாது. மறுஜன்ம பிரக்ஞையின்றி ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பதே மனிதப் பிறவியின் ஒரே நோக்கம். இதுதான் என் இதயத்தில் ஒலிக்கும் கடவுளின் குரல்.

—சர்க்ரடீஸ்

7. யார் நம்முடன் போராடுகிறானோ அவன் நம்முடைய நரம்புகளுக்கு முறுக்கேற்றுகிறான். நம்முடைய திறமையைக் கூர்மைப் படுத்துகின்றான். ஆதலின் நமது எதிரியே நமக்கு உதவி செய்பவன்.

எட்மண்ட் பர்க்

8. ஒருவனுடைய மனம் தூய்மையாயில்லாவிட்டால், பணமோ; வலிமையோ, அழகோ; அவனுக்கு பயன்படா.

—அரிஸ்டாட்டல்

தெரிந்த முத்துக்கள்

சோ. ராமசாமி IV A.

1. முகம் மாறுபடப் பார்த்தாலே, வந்த விருந்தினர் மனம் வாடிவிடும்.

"திருவள்ளுவர்"

2. குடிமக்களின் கண்ணீரே, கொடுங்கோலன் செல்வங்களை அழிக்கும் ஆயுதம்.

"அல்பெருனி"

3. அன்பும், அருளும், நூலறிவால் பெறும் பொருட்கள் அல்ல. ஒருத்தியோடு கூடி வாழும் இல்லற வாழ்க்கையில் அச்சிறிய பொருட்களை பெறலாம்.

"திரு. வி. க."

4. உலகம் என்ற போர்க்களத்தில் வாழ்க்கை என்ற போராட்டத்தில் அடங்கிக்கிடக்கும் ஆமையாய் இராதே! நிமிர்ந்து நடக்கும் தீரனாய் இரு.

"வாங்பெல்லோ"

5. நல்லவனைக்கண்டால் அவனை பின்பற்று; தீயவனைக்கண்டால் அவனிடம் உள்ள கெட்ட குணம் உன்னிடம் ஏதாவது இருக்கிறதா என்று தெரிந்து திருந்திக்கொள்.

"கான்பியூஸியஸ்"

6. நிறைகண்டால் போற்றுங்கள்: குறைகண்டால் ஒன்றும் கூறுதீர்கள்.

"இயேசு"

7. மரணத்திற்குப் பின் என்ன இருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ளும்வரை மனிதர்கள் மரணத்தைக்கண்டு பயப்பட்டுக் கொண்டுதான் இருப்பார்கள்.

"டால்ஸ்டாய்"

8 மனிதன் எதைத்துறந்தாலும் உரிமையைத் துறக்க முடியாது, துறந்தால் மனிதனாக இருக்கமுடியாது.

"டாக்டர் மு. வரதராசர்"

9. கோபத்தைவிடக் கொடிய பகை இல்லை.

"சாக்ரடீஸ்"

10. நாம் எதையுமே முழுவதும் அறிய முடியாது. ஆகவே எவ்வளவு கல்வி கற்று இருந்தாலும் சரி பணிவுடனேதான் இருக்கவேண்டும்.

"சாக்ரடீஸ்"

11. விரோதிகளைக்கண்டு தயங்காதீர்கள். உங்கள் லட்சியத்தை நோக்கி முன்னேறுங்கள்

"எல்பர்ட்ஹப்பார்டின்"

12. நாம் இன்பம் அடைய மற்றவர்களை எதிர்பார்க்கும் வரை நாம் அடிமைகளே.

"விவேகானந்தர்"

13. காந்திய இந்தியா உலகின் களங்கரை விளக்கம்.

"கவி வானம்பாடி"

14. ஒரு மனிதன் தன்னுடைய உடலைத் தவிர வேறு எந்த உடலிலும் புகுந்து வாழ விரும்ப மாட்டான். அதுபோல ஒரு நாடு மற்றொரு நாட்டின்கீழ் அடிமைப்பட்டு வாழ விரும்புவது இல்லை.

"காந்தீஜி"

15. கருத்துள்ள மனிதர்கள் காலத்தை வீண் செய்ய மாட்டார்கள்.

"டெனிக்லான்"

16. அன்பே சிறந்தது, அதுவே மதம் அதுவே, உயிர்நாடி.

"புத்தர்"

17. பணப்பையைக் காலி செய்யும் வியாதிக்கு மருந்தே கிடையாது. கடன் வாங்கும் பழக்கம் ஏற்பட்டுவிட்டால் அது தீராத வியாதி.

"ஷேக்ஸ்பியர்'

18. காலத்தையும், இடத்தையும் அனுசரித்துச் செய்தால் எந்தக் காரியத்தையும் நிறைவேற்றலாம்.

"லெனின்"

Our Intermediates — declared as 2nd best in Foot Ball in the District 53 – 54.

"மனம் ஓர் பூந்தோட்டம்"

[அலெக்ஸாண்டர் எட்வேர்ட் V-E]

நம் மனமே நமக்கு ஓர் பூந்தோட்டம். அதை நாம் புத்திசாலித்தனமாகப்பண்படுத்தவும் செய்யலாம். அல்லது ஓர் குறிக்கோளும் இல்லாமல் பாழாகப் போகவும் விட்டுவிடலாம். பயன்தரக் கூடிய விதைகளை அங்கே விதைக்காவிட்டால் பயனற்ற களைகள் அங்கே மண்டிவிடும். சத்திய வாழ்க்கைக்கு உகந்த நேர்மையான பரிசுத்த எண்ணங்கள் என்னும் விதைகளை நட்டு அறிவுப் பூந்தோட்டத்தை வளர்க்கலாம். அல்லது கெட்ட எண்ணங்களினாலும், பரிசுத்தமற்ற சிந்தனைகளினாலும் அதையே ஓர் நரகமாகவும் மாற்றிவிடலாம். நாம் தான் நமது ஆத்மாவின் சரியான தோட்டக்காரர் நாம் தான் நமது வாழ்க்கையின் சிற்பி.

நம் எண்ணங்கள் எதுவும் வீணாகுவதாக எண்ணக் கூடாது. நல்ல எண்ணங்கள் நற்பலனையும், கெட்ட எண்ணங்கள் கெட்ட பலனையும், தருகின்றன. நாம் நமது எண்ணங்களை முதலில் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். நோயும், சுகாதாரமும் எண்ணத்தில்தான் வேரூன்றிக் கொண்டிருக்கின்றன. வரம்பு மீறிய எண்ணங்கள் தேகத்தை நோய்க்குள்ளாக்கி நாசத்திற்கு வழிகாட்டுகின்றன.



Red House games & sports winners 54 – 55



Green House games & sports winners 54 – 55

அசுத்த எண்ணங்கள் நமது நாடி நரம்புகளை எல்லாம் நடுநடுங்கவைத்து தளர்ச்சிகொள்ளச் செய்து விடுகின்றன. இரத்தத்திலும் நஞ்சைக் கலந்து விடுகின்றன செயலுக்கும். வாழ்க்கைக்கும், வாழ்க்கையின் மலர்ச்சிக்கும், ஊற்று எண்ணமே. ஆகையால் நமது தேகத்தைக் காப்பாற்றிக்கொள்ள முதலில் நமது எண்ணங்களை பாதுகாத்துக் கொள்ள வேண்டும். நம் தேகத்தைநன்கு தேற்றிக்கொள்ள நம்மனதை அழகுபடுத்திக்கொள்ளவேண்டும். பின்பு புனிதமான எண்ணங்களின் மூலமாய்வலுவும், எழிலும்,மிளிரும் தேகத்தை ஆக்கிக்கொள்ளலாம்

பயம், ஐயம், கவலை முதலியவை ஆரம்பத்தில் பெரிய காரியங்களாகத் தோன்றா. நம் மனதின் ஓர் மூலையில் அவை சிறு விதைகளாகவே இருக்கும். அடர்ந்த கானத்தினிடையே ஓர் நெருப்புக் குச்சியைக் கொளுத்துங்கள். அது ஒரு சிறிய பொருள் தான். ஆனால் அது கானகம் முழுதும் தீ பரவச் செய்து விடுகிறதல்லவா! அது போலவே பயம், சந்தேகம், கவலை முதலியவைகளை எதிர்க்கலாம், எப்படி? அவற்றை எதிர்த்துப்

போராடுவது சரியான மார்க்கமல்ல; ஆனால் அவற்றை முதலிலே களைந்துவிட வேண்டும் நோயில் அகப்படுவதைவிட அது வருவதற்கு இடமில்லாமல் தடுப்பதே மேலானது ஆகும்.

நாம் எப்படி நினைக்கிறோமோ அதனைப் போலாவோம். ஒரு மனிதன் என்ன நினைக்கின்றானோ அதன்படிதான் விளங்குகிறான். அவனுடைய எண்ணங்களின் மொத்த சேர்க்கைதான் அவனது குணம். அவனுடைய ஒவ்வொரு செயலும், அவனது எண்ணத்தில் ஒளிந்துள்ள விதையிலிருந்து கிளம்புகிறது. அந்த எண்ணத்தின் பூவே செயல்; இன்பமோ அல்லது துன்பமோ அதன் கனி. பலமுறைகள் ஓர் எண்ணத்தை மேற்கொள்ளும்போது அது வழக்கமான நடவடிக்கை ஆகிறது. அதை மீண்டும் மீண்டும் பழக்கத்திற்குக் கொண்டு வரும் பொழுது குணமாகிறது. இவ்வாறு மனிதனின் குணங்கள் அமைகிறது.

நமது முக்கிய நோக்கத்தை ஆத்மீக குறிக்கோளாக மாற்றிக்கொள்ள வேண்டும். நம் எண்ணங்களுக்கெல்லாம் அதுவே மூலாதாரமாக இருக்கட்டும். வீண் எண்ணங்களில் ஈடுபடக் கூடாது. நிலையற்ற சிந்தனைக்கு இடமளிக்கக் கூடாது. பேசாதிருத்தல் தங்கம். எப்பொழுதும் புன்னகை தவழ இருக்கவேண்டும். ஓர் புட்பம் எங்கேயாவது பாடுகிறதா? ஆனால் அழகில் ஓர் இனிமையும் மனதில் ஓர் புளகாங்கிதத் தன்மையையும் அடைந்திருக்கிறது அல்லவா! அதுபோல் நாம் திகழ்வோமாக.

நட்சத்திரத்தைப்போல நாம் ஒளிர்வோமாக. சாந்தியும், சந்தோஷமும் நம்மிடமிருந்து பரவட்டும். இந்த உலகம் எனும் பாலைவனத்தில் நம் வாழ்க்கையை நிழலும், பசும்புல்லும், ஊற்றும் உள்ள சோலையாக மாற்றிக்கொள்வோம் வேறு எதைப்பற்றியும் கவலைப்படக்கூடாது. சூரியன் இருளைப்பற்றி நினைத்து விடுவதற்கு இடமே இல்லை. அது போலவே நாம் கெடுதலை நினைப்பதற்கு இடமில்லாமல் செய்துகொள்ளவேண்டும்.



Our Intermediates shield winners in the District sports 53–54

மாணவர்களும் சமூகப் பணியும்

(இரா. மங்களதுரை VI-B)

அரிது! அரிது! மாணவராகப் பிறத்த லரிது! ஆம் வருங்கால உலகின் இரும்புத் தூண்கள் மாண்புமிக்க மாணவர்களே தான் என்று அறிஞர் உலகம் அறைந்தது. முறை யோடு வரவேற்றது. மாணவர் உலகமும் இதனை!

பெரிது! பெரிது!! சமூகப்பணி புவியி னில் மிகப் பெரிது!!! ஆம், எனது பிறப் புரிமை சமூகப்பணி புரிவதே என்ற பாதை யிலே நடைபோட்டது மாணவர் உலகம். சீர் திருத்த முரசறைந்து அறை கூவி அழைத்தது மேதை உலகமும் இதனை!

ஒரு நாட்டின் நதிகள், மலைகள், மாநிதி கண்டு உலகம் மதிக்காது. அந்நாட்டின் சமு தாயம்...அதன் அமைப்பு முறை...அதில் காணும் ஒற்றுமை இவற்றைக்கண்டு தான் மதிக்கும். எங்ஙனம்? கூரியவாள்!...பலமான கேடயம்!! அஞ்சா நெஞ்சு!!!...ஆனால் அந்த விறல்மிகு வேந்தனின் விழியோ பழுது! இந்த நிலை நாட்டுக்குச் சிறப்பளிக்காது!! வழி கிடைக்காது நல்லாட்சிக்கு!!! எல்லாத்துறை யிலும் நாடு முன்னேற வேண்டுமானல் அந் நாட்டிலுள்ள சமுதாயம் அத்தனையும் நல்ல முறையிலே அமைந்தாகவேண்டும். அதன் பெரும் பொறுப்பு மாணவர்களைத்தான் சாறும்.

சமுதாயத்திலே ஏழை...பணக்காரன்; பாமரன்...படித்தவன்; தொழிலாளி...முத லாளி; உயர்ந்தவன்...தாழ்ந்தவன்; உழைப்ப வன்...ஊதியத்தை உறிஞ்சுபவன்; வேண்டிய வன்...வேண்டாதவன்; சொந்தக்காரன்... அன்னியன் என்ற விதத்திலே வித்தியாசங்க ளெல்லாம் தலைவிரித்தாடும்! அந்த நிலை குலை யச் செய்வதே மாணவர் கடமை. அறியாமைச் சூறுவளியினை அப்புறம்தள்ளி; இளந்தென்றல் வீசும் அறிவினை அணைத்துக்கொள்ள வேண் டும் எல்லா மாணவர்களும்! அதன் மூலம் தான் எல்லோருக்கும் சம உரிமை அளிக்க முடியும் சமுதாயத்திலே! இது எனது உரை மட்டுமல்ல; பகுத்தறிவாளர் வகுத்துத் தந்த துறையுங்கூட!



HOSTEL BOYS TO THE CHAPEL.

சமூக சீர்திருத்தப்பாதை துப்புரவாகச் செப்பனிடப்பட்டதல்ல; காடுமுரடான காட்டு வழி. அதில் அல்லலுற்றவர்கள் எத்தனையோ பலர், அது கண்டு மாணவர்கள் அஞ்சிவிட லாகாது. கையிலே ஒளிவிளக்கு ஏந்திச் சென்று எல்லைகாண வேண்டும். இடையிலே குலப்பிளவு... ஜாதித்துவேஷம்... மதத்துவேஷம் தடுத்து நிறுத்தும். அந்தமுட்டுக்கட்டைகளை எல்லாம்... தவிடுபொடியாக்கி...சுக்கு நூறுக்கவேண்டும் மாணவர் உலகம், தூங்கி விடக்கூடாது. சோம்பேறியாக! விழித்தெழ வேண்டும்! வீறுகொண்டு வீரப்பண் பாட வேண்டும்! பிடி, அடி, குத்து, உதை, கொல்லு ...கூக்குரலைக்கண்டு பயப்படாதே... இரத்தத்தைக் கண்டு மலைக்காதே எனப் பகர்ந்தது நம் மாணவர் வையம் தானே! கண்டதே காட்சி, கொண்டதே கோலம் எனத்திரியும் மக்களை வாழ்க்கையின் எல்லையினை வகுத்து வரம்பிற்குள் நின்று வாழ்வு நடாத்தச் செய்ய வேண்டும். மடமையை மாய்க்கவேண்டும் சுயநலத்தை சுட்டெரிக்கவேண்டும். ஒற்றுமையை ஓங்கச்செய்யவேண்டும். வேற்றுமையை வேருடன் அறுக்கவேண்டும். நேர்மையை நிலைநாட்ட வேண்டும். நீதிக்கு வழிகாட்ட வேண்டும். அமைதியினைக்காக்க வேண்டும் சமாதானத்தைப் போற்றவேண்டும். அநியாயத்தினை தூற்றவேண்டும்.

ஆமாம்! நம் நந்தமிழ் நாட்டு மாணவர்கள்...சமூகப்பணியிலே, சமுதாய சீர்திருத்தப் பாதையிலே கிளர்ச்சி செய்வார்களேயானால் நம் செந்தமிழ் நாடு செல்வத்திலும் சிறப்பிலும் சிறந்து விளங்குமென்பதற்குச் சிறிதேனும்... அணுவளவேனும் ஐயப்பாடுள்ளதோ!

வாழ்க சமூகப்பணி மாணவர் வையகந்தனிலே!
தளிர்க்க இனிமேல் தண்டமிழ் நாடே!



MORNING ASSEMBLY.

வாழ்ந்திடு தமிழே!

(S. V. மாணிக்கம் V-A)

கடம்பவனத்தை அழித்து உருவாக்கிய நாடு—கன்னித் தமிழுக்கு சங்கத் தொட்டில் கட்டி பங்கமில்லா முறையில் பாதுகாத்த நாடு, முடிசார்ந்த மன்னர்களுள் முதன்மை ஸ்தானம் பெற்ற நாடு- ஆரியப்படை கடந்தோன் அரசு செலுத்திய நாடு—தமிழ்க்கலைகள் அழியா வண்ணம் காப்பாற்றித் தரணிக்கு எடுத்துக் காட்டிய நாடு—மிதந்துவரும் காற்றினிலே பறந்து விளையாடும் மீனக்கொடியை தன்பால் கொண்ட நாடு—பரல்வளம் கொண்ட பாண்டிய நாடு! அந்தப் பாண்டிய நாட்டின் தலைநிலமாம் மதுரை நகரில் ஐக்கிய கிறிஸ்தவ உயர்நிலைப் பள்ளியில் பயின்ற அன்புத் தமிழின் சிறப்பினை உங்களின் சிந்தனைக்கு விருந்தாக அளிக்கிறேன்.

தமிழ் மொழி இயற்கை ஒலிகளால் ஆன மொழி; தமிழ் மொழி தொன்மையானது; தமிழ் மொழி உலகில் பேசப்படும் மொழிகளுக்கெல்லாம் முற்பட்டது, "கல் தோன்றி மண் தோன்றாக் காலத்து தோன்றியது நம் தமிழ். முன்தோன்றி மூத்தகுடி யென்று தமிழருக்குப் பெயர்"

தமிழ்மொழி இளமை வாய்ந்தது. பேராசிரியர் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் தமிழ்த்தாயை சீரிளமைவாய்ந்தவள் என வாழ்த்துகிறார். "பல உயிர்களையும் இவ்வுலகில் படைத்தளித்து, அழிக்கும் கடவுள் இவ்வுலகில் நிலைபெற்று இருப்பது போல் கன்னடமும், களி தெலுங்கும், கவின் மலையாளமும் தன்னிடத்து இருந்து பிரிந்து சென்ற காலத்தும் தமிழ்த்தாய் இளமைபெற்று இருக்கின்றாள். ஆனால் ஆரிய மொழியாகிய சமஸ்கிருதம் அதிலிருந்து பிரிந்து சென்ற ஏனைய மொழிகளும் உலக வழக்கிலே இல்லாமல் அழிந்து ஒழிந்து போய்விட்டது" நமது தமிழ் தலைநிமிர்ந்து நிற்கிறது. அவளுடைய புகழ்க் கொடி வானுயரப்பறக்கிறது. வாழ்த்துக்கூறுகிறது அறிவுலகம்.

தமிழ்மொழி இலக்கிய வளம் நிறைந்தது. தமிழ் மொழியின் பழமையான நூல் தொல்காப்பியம், கடைச்சங்க காலத்து இலக்கியங்கள், பதினென் கீழ் கணக்கு, பத்துப் பாட்டு, எட்டுத் தொகை என முத்தொகை நூட்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. சிலப்பதிகாரம், மணிமேகலை, முத்தொள்ளாயிரம் இதுவும் கடைச்சங்க பிற்பட்ட காலத்து நூல்களாகும். வீரசோழியம், தண்டியலங்காரம், நன்னூல் முதலிய இலக்கண நூல்களும், பெரிய புராணம், கலிங்கத்துப்பரணி போன்ற புராணங்களும், காவியங்களும் உண்டு நமது மொழியில். ஆங்கிலத்திலே ஷேக்ஸ்பியர் எழுதிய கதைகளையும் இன்னும் அவரைப் போல் இலக்கியங்கள் எழுதியவருடைய காவியங்களையும் விவரிப்போர் ஏன் நமது தமிழ் இலக்கியங்களை மறந்தனர்? தமிழ் இலக்கியங்களைக் காட்டிலும் உயர்ந்தவைகளல்ல மற்றைய இலக்கியங்கள் என்று தாராளமாகச் சொல்லலாம்.

தமிழ் மொழி இந்நாட்டில் வழங்கும் எல்லா மொழிகளிலும் ஏன்! உலகத்திலுள்ள எல்லா மொழிகளிலும் உயர்ந்தது. தனித்தியங்கும் தன்மை வாய்ந்தது. திருந்திய பண்பும் சீர்திருத்த நாகரீகமும் பொருந்தியது. அறியாமை இருள் அகற்றுவது. ஆகவேதான் தண்டியலங்காரம் பின் வருமாறு சாற்றுகிறது.

"ஓங்கலிடை வந்துயர்ந்தோர் தொழவிளங்கி
எங்கோளிநீர் ஞாலத்து இருள்காயும்—
அங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிர் ஒன்று ஏனையது
தன்னேர் இலாத தமிழ்" என்று.

தமிழ் மொழி இலக்கண விரிவுடையது. அதன் இலக்கணம் எழுத்து, சொல், பொருள், யாப்பு அணி என ஐந்துவகைப்படும். ஏனைய உலகத்து மொழிகளுக் கெல்லாம் உள்ள இலக்கணம் அமைந்து அதற்கு மேலாக அக இலக்கணத்தையும் கொண்டது. இலக்கண அமைப்பிலும் தமிழ் மொழி முதன்மை பெற்றுத் தான் இருக்கிறது.

இயல், இசை, நாடகம் எனத் தமிழ், முத்திரப்படும். சங்கத் தமிழ் மூன்றும் தா என ஔவையாரும். 'ஏழ் புகழ் உந்தும் முத்தமிழ்' எனக் கம்பரும் சிறப்பித்துள்ளார்.

அறம், பொருள், இன்பம் மூன்றைப் பற்றியும் விரிவாகக் கூறி ஒன்றே முக்கால் அடிகளால் ஆகிய திருக்குறள் உலகத்தைத் அளந்து காட்டியது. தமிழ் உலகிற்கு பொதுமறையான திருக்குறள் நால் வகையில் பிந்தியவரல்லர் நாம்.

ஆகவேதான் புரட்சிக் கவிஞன் பாரதிதாசன் கூறுகிறார்:— தன்னைப் பழித்தவனை தாய் தடுத்தால் விட்டுவிடு, ஆனால் தமிழினைப் பழித்தவனை தாய் தடுப்பினும் விடாதே என்று கூறுகிறார். ஆகையால் நமது பைந்தமிழ்ச் சோலை ஒரு பாலைவனமாக மாறக் கூடாது என்பதற்காக, அருந்தமிழ்க்கழகம் ஆட்டுவோர் கைப்பிள்ளையாக ஆகிவிடக் கூடாது என்பதற்காக, முத்தமிழ் முழங்க வேண்டிய மேடையிலே முணுமுணுப்புக்குரல் கேட்டுவிடக்கூடாது என்பதற்காக, ஆம்! பரம்பரைத் தமிழ்ப் பண்பை, வண்டமிழர் வாழ்வின் வரலாற்றை, வழி வழி வந்த வீரத்தை எல்லாம் அறிந்துகொள்ளவேண்டும் என்பதற்காக, வள்ளுவன் வகுத்த வண்டமிழை, ஔவை புகழ்ந்த அழகுத்தமிழை, இளங்கோவின் இசைத்தமிழை, பாரதிபாடிய பைந்தமிழை, கம்பன் போற்றிய கன்னித் தமிழை, செக்கிழுத்த சிதம்பரனார் செங்கண்கள் நீர் சொறியும்போது தேம்புதந்த செந்தமிழை வளர்க்க உங்கள் நெஞ்சிலே தமிழன்பு தவழ்கிறது.

தமிழே! உளங்கவர் ஓவியமே! உற்சாகக் காவியமே! ஓடை நறுமலரே! ஒழியுமிழ் புது நிலவே! அன்பே! அழகே! அமுதே! உயிரே! இன்பமே! இனியதென்றலே! பனியே! கனியே! பசுந்தோகை மயிலே! பழரசச் சுவையே! மரகதமணியே! மாணிக்கச்சுடரே! மன்பதை விளக்கே!—என்றெல்லாம் உன்னை அழைத்திடத் தோன்றுகிறது.

ஆனாலும் தமிழே! உன்னை "தமிழே" என்று அழைப்பதிலே உள்ள இன்பம் வேறு எந்தச் சொல்லிலும் இல்லையென்பேன்.

வாழ்ந்திடு தமிழே! வாழ்ந்திடு தமிழே!!



SCHOOL ARCHESTRA

சித்தார்த்தன் துறவு

(பு. க. இரங்கராமானுஜம், V–A)

இந்தியாவின் வடக்கே கபிலவஸ்து என்னும் ஒரு நகரத்தின் ஒரு புறத்தில் ஒரு குன்று இருக்கிறது. அதன் அடிவாரத்தில் ரோகினி நதி அதைச் சுற்றி அரித்து ஓடிக்கொண்டிருக்கிறது. அக்குன்றினின்றும் வட திசையாக நோக்கினால் இமயமலைத் தொடரானது ஒன்றின் மேலொன்று உயர்ந்து, கண்ணுக்கெட்டாத உயரம் பனிமூடப்பட்ட வெள்ளிச் சிகரங்களாக எழும்பி நிற்பது தெரியும். ரோகினி நதிக்கரையிலே தான் சுத்தோதன மன்னனின் அரண்மனை நள்ளிரவில் அமைதியே வடிவாக இருந்தது வாசனை எண்ணை ஊற்றி பொன் சங்கிலியில் தொங்கும் வெள்ளி விளக்கின் ஒளியும் சாளரங்களின் வழியே வரும் சந்திர கிரகணங்களின் ஒளியும் அந்தப்புற அறை ஒன்றை பிரகாசிப்பித்தன. மாளிகைக்குள் எல்லோரும் நன்றாக உறங்கிக்கொண்டிருந்தார்கள். பட்டுப் பஞ்சணை மீது ஒரு அழகிய இளைஞரும் பேரழகு மிக்க பெண் ஒருத்தியும் படுத்திருந்தனர். பக்கத்தில் அவர்கள் குழந்தை நித்திரையில் லயித்திருந்தது. ஆனால் இளைஞரோ தூக்கம் வராது பஞ்சணை மீது விழித்துட்கார்ந்து வனிதையின் அழகிய வதனத்தை கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்தார் அவரது நெற்றியில் சிந்தனை ரேகைகள் தென்பட்டன. உறக்கத்தில் ஆழ்ந்திருந்த அம்மங்கை வாய் மலர்ந்து "காலம் சமீபித்து விட்டது! காலம் சமீபித்து விட்டது"! என்று பிதற்றிக்கொண்டிருந்தாள்.

இச்சொற்களை செவியேற்ற அங்கட்டிளங்குமரன் சிறிது யோசித்து "ஆம்; காலம் சமீபித்து விட்டது மெய்தான். நான் புறப்பட வேண்டியகாலம் சமீபித்து விட்டது" என்று தனக்குள் கூறிக்கொண்டு ஓசையின்றிப் பஞ்சணையை விட்டு இறங்கி வெளியே செல்வதற்குப் புறப்பட்டார். ஆனால் மும்முறை அவ்வறையை விட்டு வெளியேறக் காலெடுத்து வைத்தும் காதலி மீதும் மகன் மீதும் உள்ள பாசம் பற்றி பின் இழுக்கத் தொடங்கியது. கடைசியாக மனைவியின் முகத்தையும் மகனின் முகத்தையும் உற்று நோக்கி விட்டு மனதை திடப்படுத்திக்கொண்டு வைராக்கியத்துடன் வெளியேறினார்.

இவ்விதம் அழகிய மனைவியையும் மகனையும் அரசையும் பெற்றார் உற்றாரையும் சுக போகங்களையும் பிறவற்றையும் ஒரு கணத்தில் துறந்து விட்டு நள்ளிரவில் அரண்மனையையும் நகரையும் விட்டு வெளியேறிய அவ்விளவரசன் யார்? அவர்தான் சித்தார்த்தர். கபிலவஸ்து தேசத்தின் மன்னனாகிய சுத்தோதனனின் செல்வக்குமாரன். யசோதரை என்னும் மங்கையின் அன்புக்கணவன். அரசுக் கட்டிலிலேயே வளர்ந்து அரசுக்கட்டிலிலேயே அமர்ந்து ராஜபோகத்தில் ஆழ்ந்து பெருமிதமுற்றிருக்கும் அரசவம்சத்தில் பிறந்த சித்தார்த்தன் பரம்பரைக் குணத்துக்கு நேர் மாறாக இயற்கையிலேயே இரக்க நெஞ்சம் உடையவராய் துன்பத்தைக்கண்டு சகியாதவராய் மக்களுக்கு நேரும் பிணி, மூப்பு, சாவு முதலியவைகளைப் போக்கித் துன்பத்தை துடைத்து எல்லோரும் இன்புற்று வாழும் வழியைக்காணவே அரசபோகம் யாவற்றையும் துறந்து புறப்பட்டு விட்டார். இவரன்றோ காருண்ய மூர்த்தி! இவரன்றோ சர்வஜீவதயாபரன்! இவரது அரிய சேவையினால் மக்கள் குலத்துக்கே மகானானார். பிறகு போதி விருக்ஷத்தின் அடியில் அமர்ந்து ஞானத்தைப் பெற்று "புத்தர்" என்ற சிறப்புப் பெயரைப் பெற்றார் 'தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்" என்ற பெயரையும் பெற்றார். புத்தர் பிரானை இன்றும் உலகமெலாம் போற்றுகிறது.



சொல்லுங்கள் பார்ப்போம்?

(ஆ. வீரணன் V-D)

மங்களபுரியை மகேந்திரவர்மன் என்னும் அரசன் ஆண்டுவந்தான் இவ்வரசனுக்கு மரகதம் என்னும் ஓர் புதல்வி இருந்தாள். மரகதம் நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தாள். மங்கைப் பருவம் எய்தினள்- மரகதத்திற்கு ஓர் மணவாளனைத் தேர்ந்தெடுப்பதில் மன்னன் மனதைச் செலுத்திக்கொண்டிருந்தான். மன்னர் மந்திரியை கூப்பிட்டு சுயவரம் நடத்தலாமா என்று கேட்டார். மந்திரி கூறிபதாவது, 'சுயவரம் வேண்டாம், நமது அந்தப்புரத்திலிருந்து ஒரு கனி கொண்டுவரும் அரசிளம் குமாருக்கு நம் இளவரசியை மணம் முடித்துக் கொடுப்போம்' என்றார். மன்னர் சம்மதித்தார் 'இப்போட்டிக்கு வேண்டியஏற்பாடுகள்செய்க' என்று மந்திரிக்குக் கட்டளையிட்டார் ஒவ்வொரு நாட்டு மன்னனுக்கும் ஓலை விடுத்தார். பல மன்னர்கள் கனி கொண்டுவர முனைந்தனர். தோல்வியடைந்தவர் பலர், நாக நாட்டு இளவரசன் இளந்தத்தன் என்பவன் கனி கொண்டுவர அந்தப்புரத்துக்குப் புறப்பட்டான். முதல் வாசலில் ஒரு காவல்காரன் நின்றான். அவன் கூறிபதாவது, 'அரசே தாங்கள் கொண்டுவரும் கனிகளில் முக்கால் பங்கு எனக்குக் கொடுக்கவேண்டும்'' மேலும் என்னிடம் வரும்பொழுது என் பங்குபோக மீதி ஒரு கனிதான் உங்களிடம் இருக்கவேண்டும் அக் கனியைத் தான் அரசரிடம் சேர்க்க வேண்டும் என்றான். இளந்தத்தன் ஒப்புக்கொண்டு மேலும் நடந்தான். இரண்டாவது வாசலில் ஓர் காவல்காரன் நின்றான், அவன் கூறியதாவது. "அரசே தாங்கள் கொண்டுவரும் கனிகளில் முக்கால் பங்கு எனக்குக் கொடுக்க வேண்டும்'' என்றான். "சரி'' என்று ஒப்புக்கொண்டு மேலும் நடந்தான். மூன்றாவது வாசலில் ஓர் காவல்காரன் நின்றான். அவன் இரண்டாவது காவல்காரன் சொன்னதுபோல் சொன்னான். சரி என்று ஒப்புக்கொண்டு மேலும் நடந்தான். இளவரசன் மரத்தை அடைந்தான். இளவரசன் எத்தனை கனிகள் பறிக்கவேண்டும். சொல்லுங்கள் பார்ப்போம்?

2. ஒரு பெரியவருக்கு மூன்று குழந்தைகள் இருந்தனர், மூவரும் காளைப் பருவம் அடைந்தனர். பெரியவரும் முதுமை அடைந்து விட்டார். இவருக்கு முப்பது பசுக்கள் இருந்தன. இவைகளில் கால்படி பால் கறக்கும் பசுக்கள் பத்து, முக்கால்படிக்கறவை பத்து, இரண்டுபடிக் கறவை பத்துமாக இருந்தன. பெரியவர் மரணப்படுக்கையில் இருந்தார். இப் பசுக்களைத் தம் புத்திரர்களுக்குப் பிரித்துக்கொடுக்க எண்ணினார். ஒவ்வொருவருக்கும் பசுக்களும் எண்ணிக்கையில் சரியாகப் பகிர்ந்து கொடுக்கவேண்டும். பாலும் சரியாக இருக்கவேண்டும். அப்பெரியவர் ஒவ்வொருவருக்கும் எப்படிப் பகிர்ந்து கொடுத்திருப்பார். சொல்லுங்கள் பார்ப்போம்?

3. ஒரு குளத்தில் சில புஷ்பங்கள் இருக்கின்றன. பல வண்டுகள் சுற்றிக்கொண்டிருந்தன. ஒவ்வொரு புஷ்பத்திற்கும் ஒரு வண்டு வீதம் உட்கார்ந்தால் ஒரு புஷ்பம் தேவை. ஒவ்வொரு புஷ்பத்திற்கும் இரண்டிரண்டு வீதம் உட்கார்ந்தால் ஒரு வண்டுதேவை எத்தனை பூக்கள்? எத்தனை வண்டுகள் இருந்தன வென்று சொல்லுங்கள் பார்ப்போம்?

(குறிப்பு:- இதற்குரிய விடையை வேறு பக்கம் நம்பர் 47ல் காண்க)



மாரியின் மத்தியிலே

[து. பட்டாபிராமன், 5ம் படிவம் 1ம் பிரிவு]

மத்தியான வெயில் மண்டையை உடைத்துக்கொண்டிருந்தது, மனிதர்கள் எதையும் தாங்கிக்கொண்டு தத்தம் காரியங்களை செய்து கொண்டிருந்தனர். பாருக்கு உழைக்கும் பாட்டாளிகள் தம்கூட்டாளிகளுடன் வேலைசெய்து கொண்டிருந்தனர். பாய்ந்துவரும் நீரைப் போல, பள்ளி விட்டதும் பையன்கள் ஓடி வந்தார்கள். பாதையில் பள்ளி மாணவர்கள் செல்லும் காட்சி ஆற்றில் நீர் நிறைந்து ஓடும் காட்சியைப்போலிருந்தது.

திடீரென்று கருமேகங்கள் கதிரவனைச் சூழ்ந்துகொண்டன, காற்று இலேசாக அடித்துக்கொண்டிருந்தது. வானத்திலே ஒரு மின்னல்! பின்னால் ஒரு இடி! மழை இலேசாக தூற ஆரம்பித்தது. "சோ" என மழை பெய்ய ஆரம்பித்தது. மாடுகள் மருண்டு ஓடின. ஆடுகள் அரண்டு ஓடின. வேலை கிடைக்காமல் சாலையில் படுத்துறங்கியவர்கள் தங்கள் ஓலைக் குடிசையை நோக்கி ஓடினார்கள், பாடுபட்டு உழைத்துக்கொண்டிருந்த பாட்டாளிகளும். பாமரர்களும் பதுங்கினர். மண்டையை உடைக்கும் வெயிலைத் தாங்கும் மனிதன், ஒரு துளி மழை விழவும் மருள வேண்டிய காரணம் என்ன என்று தெரியவில்லை! இம் மா மாரியில் மனிதர்களும், மற்றவைகளும் ஒதுங்கின. ஆனால்?

ஒரு உருவம்! கிழிந்த சட்டை, ஒட்டிய வயிறு, உலர்ந்த உதடு, உருக்குலைந்த உடல், முதலியவைகளால் காட்சியளித்தது. வயது பதினைந்து இருக்கும் மழையைத் தாங்க முடியாததால் மெல்ல எழுந்து, எதிரிலுள்ள சாலையில் உள்ள வீட்டின் தாழ்வாரத்திற்கு தள்ளாடி, தள்ளாடி சென்று கொண்டிருந்தான் ஒரு பையன். பாதிப் பாதையை கடந்திருப்பான். திடீரென்று அந்தப் பக்கம் வந்த ஒரு கார் அவன் மேல் ஏறிவிட்டது. 'ஐயோ அம்மா" என்று சத்தம் கேட்டது. அவ்வளவு தான்! அடுத்த விநாடி அந்தப் பையன் மீளா யாத்திரையை ஆரம்பித்துவிட்டான். அவனைத் தூக்கவந்த ஒரு ஆள் அவன் பையிலிருந்து விழுந்த அந்த நாட் குறிப்பை எடுத்து படிக்க ஆரம்பித்தார். அதில்,

நான் என்று இந்தப் புவியில் பிறந்தேனோ அன்றே எனது தந்தை இயற்கை எய்தினார் என் அன்னை என்னை ஆளாக்க அரும்பாடுபட்டாள். அவளும் இப்பாரில் அதிக நாட்கள் இருக்கவில்லை. அடுத்த ஆறு ஆண்டிலேயே அவளும் திரும்பா யாத்திரையை மேற்கொண்டாள். அனாதையானேன் ஆதரவற்றவனானேன். ஆகாரம் இல்லாமல் அலைந்தேன். பணக்காரர் பலர் இருந்தனர். ஆனால் பயனில்லை. பாவி முகத்தைப் பார்க்க யாருமில்லை. பணங்கொடுத்து பசியைப்போக்க அந்த பாழும் மனம் கேட்கவில்லை போலும்! கடல் நீரில் தானே முத்து கிடைக்கிறது. சேற்றில் தானே செந்தாமரை மலர்கிறது. அதுபோல பணக்காரர் பலர் மத்தியில் பனையூர் பண்ணையாளர் பரசிவம் இரக்க சிந்தை உள்ளவராக இருந்தார். என் மேல் இரக்கம் கொண்டு என்னை எடுத்து வளர்த்து, என் வாழ்வை வளமாக்கினார் என் வாழ்விலே, வானத்திலே வானம்பாடி அலைந்து திரிவது போல் வளர்ந்தேன். அவருக்கு "முல்லை" என்ற ஒரு பெண் இருந்தாள். நானும் அவளும் ஒன்றாகப் பழகினோம் படித்தோம். நான் காவது படிவம் முடிய நான் ஒரு வகுப்பிலும் தேர்வில் தோற்றுப்போகவில்லை ஐந்தாம் படிவத்தில் நுழைந்தேன். தகாத பழக்கங்கள் தலை எடுக்க ஆரம்பித்தன. பள்ளிக்கு போகாமல் பேசும்படங்களுக்குச் சென்றேன், பண்பு கெட்டவர்களுடன் சேர்ந்து, பாடங்களைப் படிக்காமல் பனையூரைச் சுற்றினேன். அதன் பலன்?

அந்த ஆண்டுத் தேர்வில் தோற்றுப் போனேன். பண்ணையாளர் பாய்ந்தார் என் மேல். பதை பதைத்தார். ஆம்! அவரல்லவா பணங் கொடுத்து பசியைப் போக்கி படிக்க வைத்தவர். அவர் ஆசை காசைப்போல் கடுகிச் சென்றது. "டேய் அனாதைப் பயலே! கோழியைத் தூக்கி கோபுரத்தில் வைத்தால்

அது கொக்கரிக்காமல் இருக்குமா என் ஆதரித்ததற்கு நீ காட்டிய ஆதரவா இது! வீட்டை விட்டு ஓடிப்போ,'' என்று பண்ணையாளர் கர்ஜித்தார். முல்லையின் முகத்திலே முறுவல் இல்லை. கண்ணீர் கரை புரண்டன. அவளது கன்னத்தில். கலங்கிய கண்ணுடன் என்னை பரிதாபமாகப் பார்த்தாள். பண்ணையாளர் முகத்திலே பரபரப்பு, பரிதாபமாக இருந்தது.

வேறு வழியின்றி வெளியேறினேன் வீட்டை விட்டு. ஆம்! இனி நான் அனாதை. மேலும் அற்பன். ஆதரித்தவருக்கு அநியாயம் செய்தேன். கொடுத்தவருக்கு கொடுமைகள் புரிந்தவன். நம்பியவருக்கு நய வஞ்சகம் செய்தவன். கையிலிருந்த காசைக்கொண்டு சிறிது காலம் கழித்தேன். ஆனால் அது எந்த மூலைக்கு? வேலை தேடி அலைந்தேன். அகப்படவில்லை. அலைந்து அலைந்து அலுத்துப்போனேன். பசி காதை அடைத்தது. பயனில்லை. காரணம்? கையிலே காசு இல்லை. பாரமாக இருந்தேன் பாருக்கு. இப்படியாகவே இருந்தேன். இருக்கிறேன். இருக்கப்போகிறேன்.

"தமிழ் அரசு"

என்று எழுதியிருந்தது அந்த நாட்குறிப்பில். காரிலிருந்து இறங்கிய கனவான், அந்த நாட்குறிப்பை வாங்கி படிக்கலானார். அவரோடு ஒரு பெண்ணும் வந்திருந்தாள். அவர் முகத்திலே ஒரு கலக்கம், கண்களிலே நீர் கசிந்தது. கண்ணீர்த்துளிகள் அவர் கன்னங்களின் வழியாக கரைபுரண்டது. காரணம்? காரில் அடிபட்டுக் கிடந்த அந்தப் பையன் மேல், அந்தக் கனவான் கவலைப்படக் காரணம்? பக்கத்திலிருந்த பாவையின் மனதிலும் பச்சாதாபம், பதை பதைப்பு. அவரும் அந்த அணங்கும் கவலைப்பட்ட காரணம்? ஆம் அவர்கள் தான்! அவனை ஆதரித்து, ஆளாக்கி, அரும் மனிதனாக திகழவைக்க வேண்டும் என்று எண்ணிய மனிதர் பண்ணையாளர் பரமசிவமும் முல்லையும்!

பஞ்சையாகப் பிறந்து, பராமரிக்க ஆள் இன்றி, பசியோடு அனாதையாகத் திரிந்தகாலத்தில், பணக்காரர் ஒருவரால் ஆதரிக்கப்பட்டு, பகுத்தறிவாளனாகி, நன்கு படித்து, பின்பு பண்பை இழந்து பாருக்கு பாரமாக இருந்த பையனின் உயிர்? அது சாந்தி அடைவதாக.

நம் நாட்டு இளைஞர்கள் எத்தனை பேர், இது போல், இளம் பிராயத்தில், கடமை உணராது, மீளாத்துயரடைகிறார்கள்!

———



Conference by the D. E. O; after the school inspection.

திரு நபியின் அறிவுரைகள்

(H. A. M. ஷெர்புதீன் V-C)



Photo taken when the Director of Public Instruction with members of the Elementary Education Committee Visited us.

1. தன்னுடைய அண்டை வீட்டான் பசித்திருக்க, தன் பசியை தீர்த்துக்கொள்ளும் ஒருவன் தெய்வ விசுவாசியாக மாட்டான்.

2. தாகத்தைத் தீர்க்கத் தண்ணீர் கொடுப்பதைவிடச் சிறந்த தருமம் வேறொன்றும் இல்லை.

3. ஏழைகளுக்காகவும் விதவைகளுக்காகவும் ஒருவன் பாடுபட்டால், அவன் கடவுளின் பாதையில் தருமப்போர் புரிபவனைப்போன்றவனாவான்.

4. பொய்ச்சத்தியம்செய்து பொருளை விற்பது வியாபார விருத்தியைக் கெடுத்து விடும்.

5. நற்கதியடைய விரும்புகிறவன் தனது நாவைப்பேணி காத்துக்கொள்ள வேண்டும்.

6. சுவையுள்ள உணவையும் மெல்லிய ஆடைகளையும் விரும்புபவரே கெட்ட மனிதராவார்

7. மனிதனுக்குச் சிரசு பிரதான அங்கமாக இருப்பது போல் வாழ்க்கைக்குத் தெய்வ வழிபாடு பிரதான அங்கம் ஆகும்:

8. புகழை விரும்பும் ஒருவனை அவ்விருப்பமானது குருடனாகவும் செவிடனாகவும் செய்துவிடுகிறது.

9. ஒருவன் பிறரைக் குறைகூறுபவனாகவும், சபிப்பவனாகவும் ஆபாச வார்த்தைகளைப் பேசுபவனாகவும், இருக்கக்கூடாது.

10. தான் அளித்த நன்கொடையைத் திரும்பப் பெற்றுக்கொள்பவன், கக்கியதை மீண்டும் விழுங்கியவனாவான்.

அகந்தை கொண்ட வேந்தன்

பா. கோயில் பிள்ளை, நான்காம் படிவம் முதற்பிரிவு

முன்பு உஜ்ஜய்னி என்ற இயற்கை வளம் பொருந்திய நாட்டை 'உதங்கவர்மன்' என்ற வேந்தன் ஆண்டுவந்தான். அவன், நாட்டு மக்களின் நல் வாழ்வைக் கருதி அரசு செய்ய வில்லை. தன் சுகத்திற்காகவே, வாழ்ந்துவந்தான். அமைதியிலும், நீதியிலும், அவன் நாட்டைச் சரியாகக் கவனிப்பதில்லை. சபைக்கு அவன் வந்து நீதிபரிபாலனம் செய்யமாட்டான். சபை சம்பந்தப்பட்ட காரியம் அனைத்தும் மந்திரியே கவனித்து வந்தான். கானகம் சென்று விலங்குகளை வேட்டையாடுவதே வேந்தனுக்கு மிகுந்த விருப்பம். மந்திரியும் மன்னனின் மனதை மாற்ற எவ்வளவோ புத்தி மதிகள் சொல்லிப் பார்த்தான். அவைகள் எல்லாம் விழலுக்கு இறைத்த நீராயின.

ஒரு நாள் வழக்கம் போல வேட்டையாடுவதற்காக கானகம் சென்றான். அவனுடன் போர் வீரர்களும் துணைக்குச்சென்றனர் அங்கே அவன் முன் ஓர் அழகிய புள்ளிமான் துள்ளிக் குதித்து ஓடியது. மனதிலே ஆசையைத் தூண்டிய புள்ளிமானைப் பிடிப்பதற்காக அரசன் மானைத் தொடர்ந்தான். வீரர்களும் பின் தொடர்ந்தனர். காற்றுவேகத்தில்சென்ற வேந்தனை பின் தொடர்வதற்கு வீரர்களால் இயலவில்லை. வேந்தனும் மானைப் பிடித்தானில்லை. மிகுந்த களைப்பாயிருந்ததால் வேந்தன் துரத்துவதை நிறுத்திப் பக்கத்திலுள்ள சுனையின் அருகிலுள்ள மரத்தினடியில் அமர்ந்து, "இன்னும் இந்த முட்டாள்கள் வரவில்லையே, அவர்களுக்கு சரியான தண்டனை கொடுக்கவேண்டும்" என்று முணுமுணுத்துக் கொண்டான். பிறகு ஆடைகளைக் கழற்றி மரத்தில் ஊசலாடவிட்டான். பிறகு களைப்பின் காரணமாக கண்ணயர்ந்தான்,

சிலமணி நேரங்களுக்குப் பின் நித்திரையிலிருந்து எழுந்தான். என்ன ஆச்சர்யம்! மரத்தில் வைத்திருந்த உடைகளைக்காணோம். புல் மேய்ந்து கொண்டிருந்த குதிரையையும் காணோம் சினம்கொண்ட வேந்தன், "நான் யாரென்று அறியாமல் அற்பர்கள் விளையாடுகின்றனர்" என்று கடிந்துபேசி கோபத்துடன் சப்தமிட்டான். எதிரொலி கேட்டதைத் தவிர பதிலொன்றும் வரவில்லை.

அவனது கண்களுக்கு அருகில் குடிசையொன்று இருப்பது தெரிந்தது. உடனே கம்பீர நடைபோட்டு அக்குடிசையினுள் சென்றான். உள்ளே ஓர் முனிவர் தவத்தில் ஆழ்ந்திருந்தார். ஏதோ சப்தம் கேட்டுத் திடுக்கிட்ட முனிவர் வேந்தனைக் கண்டவுடன் இள நகை அரும்பினர். "என்னை வேந்தனென்றும் பாராது, நீ உபசரியாமல் நகைக்கின்றாயே" என்று கோபத்துடன் கூறினான் வேந்தன். "அகந்தை நிறைந்த பைத்தியமே! நீயா வேந்தன்? மக்களுக்கு, மனுநீதி புகட்டாது, மந்திரியை ஆளவைத்துவிட்டு, உன் இஷ்டம்போல் வேட்டையாடச் செல்லும் நீயா வேந்தன்? பசி, பசி என்று கதறும் மக்களின் மனதை ஆறுதல் அளிக்காது அரசன் என்ற பட்டம் சூட்டி ஆடம்பரத்துடன் வாழும் நீ அரசனா? என்றார் முனிவர். அரசன் கோபத்துடன், "என்னை ஏளனம் செய்தவனே! நீ யார் எனக்கு புத்தி புகட்ட. நின்னைப்பார்! என்ன செய்கிறேன்" என்றான். முனிவர் கோபத்துடன், "அட, அறிவுகெட்ட அரசனே! போ உன் நாட்டிற்கு அங்கு என்ன நடக்கிறதென்றுபார்! அப்பொழுதாவது உனது அகந்தை அகன்று விடட்டும்." உடனே அரசன் கோபத்துடன் தன் நாட்டை நோக்கி ஓடினான்! கனி மரங்களையும், காட்டாறுகளையும் கடந்து ஓடினான்! பள்ளம்; மேடு என்று பாராது பரபரப்புடன் ஓடினான்!! வயல்களையும், வனாந்திரக் காடுகளையும் கடந்து ஓடினான்!!!

கோட்டை வாயிலை அடைந்தான். அங்கே அரண்மனை வாயிலினுள் செல்லயத்தனித்தான். அப்பொழுது காவலர்கள் அவனைப் பிடித்து நிறுத்தினர். சினம் கொண்ட வேந்தன், இருவரையும் செங்கண்ணால் நோக்கி, "என்னைப் பிடித்து நிறுத்தும் மூடர்களே! நான் இந்நாட்டு வேந்தன் என்று உங்களுக்

குத் தெரியவில்லையா? வேட்டையாடச்சென்ற என்னை தன்னந்தனியே விட்டு விட்டு வந்து விட்டீர்களே, நான் உங்கள் வேந்தன், என்னை விடுங்கள்'' என்று கூறித்திமிறினான். உடனே வாயிற்காவலர்கள் 'கொல்' என்று சிரித்து 'பைத்தியம்' என்ற பட்டம் சூட்டி "வேட்டையாடச் சென்ற எம் வேந்தர் அன்று மாலையே, அரண்மனைக்கு வந்துவிட்டாரே! அதோபார்! எம் அரசர் அவைக்குச் சென்று, மக்களின் குறைகளைக்கேட்டு, உடனே நிவர்த்தி செய்வார்'' என்று கூறினார்கள். உடனே அரசன் பின்வாங்கி பக்கத்திலுள்ள மரத்தின் கீழ் அமர்ந்தான். அமர்ந்து கண்ணீர் உகுத்து, நான் என் அகந்தையால் எனக்கு அழிவைத் தேடிக்கொண்டேன். அருமை ராஜபத்தையும் பறிகொடுத்தேன். என்று புலம்பினான் அப்பொழுது, கானகத்தில் கண்ட முனிவர் வந்து, "வேந்தே! உன் வீண் அகந்தையால் தான் நாட்டை இழந்தாய், இப்பொழுதாவது உனக்கு புத்தி வந்ததா? வா, என்னுடன், அரண்மனைக்குச் செல்வோம், "என்று அழைத்தார் மன்னன், முனிவரிடம் விழுந்து மன்னிப்புக்கேட்டுக் கொண்டான் பின்பு இருவருமாக அரண்மனைக்குள் சென்றனர். அப்பொழுது அங்கே!

முன் தூரத்திய காவலர்கள் பணிந்து வரவேற்றனர். மாடிகளில் மாதர்கள் நின்று மலர்களைத்தூவினர். வாத்தியம் முழங்கிய போர் வீரர்கள் மரியாதை செய்தனர். அரியாசனத்தில் வீற்றிருந்த வேந்தன், முடியை அகற்றி அரியாசனத்தைவிட்டு எழுந்து மரியாதை காட்டினான். வேந்தன் உதங்கவர்மன் வியந்து "என்னைப் போன்று இருக்கும் இவ்வேந்தன் யார்.? என்று முனிவரிடம் கேட்டதும், முனிவர் புன்சிரிப்புடன், "வேந்தே! நீ அகந்தையுடன் இருக்கவும், நின்னை மாற்றுவதற்காக நான் பலதடவை பலவழிகளைச் செய்துபார்த்தேன். இயலவில்லை. கடைசியாக இந்தக் காரியம் தான் கிடைத்தது. என் தவத்தின் பயன் தான் இம் மன்னன்'' என்றான். உடனே பொய் உதங்கவர்மன் மறைந்தான். முனிவர் பின்பு உதங்கவர்மன் தலையில் முடிசூட்டவும். "மன்னர் வாழ்க!'' என்ற கோஷம் வானைத் தாக்கியது.

முற்றும்!



Our Main Craft—Woodwork

ஐக்கிய கிறிஸ்தவ உயர்நிலைப்பள்ளி, மதுரை.

U. C. வாஞெலி நிலையம்

தலைவர்

திரு. கே. எஸ். சுவாமிநாதன் B.A., L.T.,

உதவித் தலைவர்

திரு. எஸ். எட்வர்டு B.A, L.T.,

அமைப்பாளர்

வித்துவான் அ. சாமிஐயா

உதவி

பள்ளி மாணவத் தலைவர்

U. C. RADIO STATION

இவ்வாஞெலி நிலையமானது கடந்த இரண்டாண்டுகளாக மேலே கண்டுள்ள தலைவர்களையும் அமைப்பாளர்களையும் கொண்டு நடந்து வருகிறது. இவ்வாண்டுத் தொடக்க உரையினை நிகழ்த்தின தலைமையாசிரியரவர்கள், இவ்வாஞெலியின் வளர்ச்சி பற்றிய அரிய கருத்துக்களைக் கூறினதுடன் மாணவர்கள் இவ்வாஞெலியினுல் நல்ல பயன் அடையவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்கள். பின்னர் அமைப்பாளர் நன்றிகூற தொடக்க விழா முடிவுற்றது.

நோக்கங்கள்:—மாணவர்கள் தங்களின் முயற்சியினை நன் முறையில் பயன்படுத்தவேண்டுவதாகும். கதை, கட்டுரை, நாடகம், பாட்டு இவைகளை மாணவர்கள் தாங்களே தயாரித்து அவைகளை இவ்வாஞெலியின் மூலமாகப் பேசியும் பாடியும் மற்றவர்களையும் மகிழ்விப்பதாகும்: ஆசிரியர்களும் மாணவர்கட்கு அவ்வப்போது இதன் மூலம் அறிவுரை, அறவுரைகளும் கூறி மகிழ்விக்கின்றனர்.

தொண்டு:—நண்பகல் உணவிற்காக விடப்படும் ஓய்வு நேரத்தில் இவ்வாஞெலி ஒவ்வொருநாளும் தனது வேலையினை (1-50க்கு) தொடங்கி 2-15க்கு வேலையினை முடிக்கின்றது. மாணவர்கள் வாரத்தின் கடைசிநாளில் கொடுக்கும் கதை, கட்டுரை, பாட்டு, நாடகம் இவைகளை வரன்முறையாக அமைத்து, அதன்படி மாணவர்கட்கு இடமளித்து அவர்களை உற்சாக மூட்டுகின்றது. பகல் உணவு உண்ட மாணவர்கள் தங்களின் வகுப்பறைகளிலிருந்து இந்நிகழ்ச்சிகளைக்கேட்டு மகிழ்கின்றுர்கள்.

அ. சாமிஐயா

அமைப்பாளர்



சென்னை—கலங்கரை விளக்கம்



துறைமுகத்தின் உள்ளே.



மியூசியத்தில் Dr. அழகப்ப செட்டியார் காரில்!



மியூசியத்தில் நாங்கள் எல்லோரும்.



மிருகக்காட்சி சாலையில் யானையும் நாங்களும்.

மிருகக்காட்சி சாலையில் பகல் உணவைப் பாங்காய் உண்டோம்.



துறைமுகத்தில்.

சென்னையில் இருநாள்

(வித்துவான் அ. சாமிஐயா)

வழக்கமான ஒலியைப்போலத்தான் அன்றும், "ஹலோ, ஆபீஸ் காலிங்" என்ற ஒலி, தலைமையாசிரியர் அறையிலிருந்து பள்ளி வானொலி இசைத்தது. அந்த ஒலி மாணவர்கள் செவிகளில் விருந்தோ இல்லையோ, அவர்கள் முகங்கள் அன்றலர்ந்த செந்தாமரை போன்று மலர்ந்தன. காரணம், அது சென்னை உல்லாசப் பிரயாணச் செய்தி தான்!

25—2—55 தேதி வெள்ளிக்கிழமை மாலை 7மணிக்கு, திருவனந்தபுரம் துரித வண்டியில் நூற்றிருபது மாணவர்கள், தலைமையாசிரியர் உள்ளிட எட்டு ஆசிரியர்கள் சேர்ந்த கோஷ்டி சென்னைக்குப் பிரயாணமாயிற்று. இருபது மாணவர்கள் கொண்ட குழுக்களாக மாணவர்கள் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு அணித் தலைவர் ஆசிரியர்களிலிருந்து நியமிக்கப்பட்டனர். ஒவ்வொரு அணிக்கும் ஒவ்வொரு நிறத்தில் அடையாளச் சின்னம் (Badge) கொடுக்கப்பட்டது.

26-2-55ல காலை 7 மணிக்கு சென்னை எழும்பூரை அடைந்தது பிரயாணக் கோஷ்டி. அங்கு எங்களுக்கு ஏற்படுத்தியிருந்த மோட்டாரில் ஏறி, புரசவாக்கத்திலுள்ள (E. L. M. Fabricious High School) முகாமிற்குச் சென்றோம் அங்கு காலைக்கடனை முடித்துக் கொண்டு, சிற்றுண்டி அருந்திய பின், மோட்டாரில் ஏறி, "மூர் மார்க்கெட்" (Moore Market)டை அடைந்தோம். அவ்விடமிருந்து சென்னைக் கார்பரேஷன் கட்டிடமாகிய "ரிப்பன்" கட்டிடம் (Rippon Building), விளையாட்டு அரங்கம் (Stadium), பூக்காட்சி சாலை (Flower show) முதலியவற்றை முறையே சென்று பார்வையிட்டோம் பின் மிருகக்காட்சி சாலை (Zoo)க்குச் சென்று காலை 11 மணி முதல் 1 மணி வரை, பற்பல விநோதமான மிருகங்களையும், பறவைகளையும் கண்டு களித்தோம். பின்பு பகல் உணவை அங்கே முடித்துக்கொண்டோம்.

மாலை 1-30 மணிக்கு அவ்விடமிருந்து காரில் புறப்பட்டு சென்னைத் துறைமுகம் (Madras Harbour) அடைந்தோம். அங்கு, அமெரிக்காவிலிருந்து கோதுமை ஏற்றிவந்த ஒரு பெரிய கப்பலுக்குள் சென்று பார்வையிட்டோம். பின்பு அங்கிருந்து புறப்பட்டு, உயர் நீதி மன்றம், (High Court) கலங்கரை விளக்கு (Light House), திருவல்லிக்கேணி கடற்கரை, (Triplicane Beach) முதலியவற்றைப் பார்வையிட்டோம்; பின்பு இரவு 8-30 மணிக்கு எங்கள் முகாமிற்குக் காரில் சென்று அடைந்தோம். இரவு உணவுக்குப் பின், இறை வணக்கம் செலுத்திய பின், 10 மணிக்கு உறங்கச் சென்றோம்.

27-2-55ல ஞாயிறு காலை ஆறுமணிக்கு அணித்தலைவர்களின் ஊதுகுழல் ஒலித்தது. காலைக்கடன்களை கடிதினில் முடித்தவுடன் அணி அணியாகச் சென்று சிற்றுண்டி அருந்தினோம். பின் கார் ஏறி பொருள் காட்சி சாலை (Museum)க்குச் சென்றோம். அங்குள்ள பழங்கால சிற்பங்களின் சிறப்பையும், பலவிதமான மிருகங்களின் எலும்புக்கூடுகளையும், நன்கு பாடம் செய்யப்பட்ட பறவைகளின் உருவங்களையும் கண்டுகளித்து, பின் அருகிலுள்ள "கன்னிமாரா" நூல் நிலையத் (Connemara Library) திற்குச் சென்று பார்வையிட்டோம். பின் சுமார் 10 மணிக்கு அவ்விடமிருந்து புறப்பட்டு, தேனாம்பேட்டையிலுள்ள காங்கிரஸ் பொருட்காட்சி சாலையை அடைந்தோம்.

முன்னேற்பாட்டின்படி அனுமதிச் சீட்டுகளைப் பெற்றுக்கொண்டு பொருட் காட்சி நிலயத்தின் உட்சென்று கண்கவர் காட்சிகள் பலவற்றைக்கண்டு களித்தோம். வாங்கவிரும்பிய பொருள்களை வாங்கியும் வைத்துக்கொண்டோம். அரசியலாரால் நடத்தப்படும் ஐந்தாண்டுத் திட்டக்காட்சி முதல், அந்நியநாட்டு விஞ்ஞான வளர்ச்சிகளைக் காண்பிக்கும் காட்சிகள் முடிய எல்லாவற்றையும் கண்டு களித்தோம். குறிப்புப் புத்தகங்களில் குறித்தும் வைத்துக்கொண்டோம் பகல் உணவு உண்ட பின் மீண்டும் பொருட் காட்சி சாலைக்குள்

நுழைந்து பார்வையிட்டோம். காட்சிகள் கண்ணுக்கும், கருத்துக்கும் விருந்தாக, அவ்வளவு நேர்த்தியாக இருந்தன. மாலை சுமார் 4-30 மணிக்கு அவ்விடமிருந்து புறப்பட்டு, எங்கள் முகாமிற்குச் சென்றோம். அங்குள்ள எங்கள் மூட்டைகளை எடுத்துக்கொண்டு எழும்பூர் புகை வண்டி நிலையத்திற்குக்காரில் சென்றோம். அங்கிருந்து, கட்டணத்தாள் களைப்பெற்று, எங்களுக்காக பிரத்யேகமாக நியமிக்கப்பட்டிருக்கும், பெட்டிகளில் (Carriages) அமர்ந்து பிரயாணத்தைத் துவக்கினோம். அடுத்த நாள் (28—2—55) காலை 7-30 மணிக்கு சுகமாக மதுரை வந்து சேர்ந்தோம். பின்பு எங்கள் பள்ளியை அடைந்து தலைமை "அண்ணு", (தலைமை ஆசிரியர்) மற்ற ஆசிரியர்களுக்கும், நன்றியைத் தெரிவித்துக் கொண்டும், இறைவனுக்கும் நன்றியையும்; வணக்கத்தையும் தெரிவித்துக்கொண்டும் தங்கள் தங்கள் இல்லங்களுக்குத் திரும்பினோம்.

சென்னை எங்கட்கு இருநாட்களிலும் இன்பலோகமாகக் காட்சியளித்தது இந்த அரிய சந்தர்ப்பத்தை எங்களுக்கு அளித்த தலைமை ஆசிரியருக்கு, மாணவர் சார்பிலும், ஆசிரியர்கள் சார்பிலும், மனமுவந்த நன்றி உரித்தாகுக.

நம் நாட்டில் உழவர்கள் நிலை

[பொ. கல்யாணசுந்தரம், 3-ம் படிவம் 4-ம் பிரிவு]

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்—மற்றெல்லாம்
தொழுதுண்டு பின் செல்பவர்"

கிராமங்களே ஒரு நாட்டின் உயிர் நாடி. கிராமத்திலுள்ள உழவர்கள் நிலத்தை நன்கு பயிரிட்டுத் தானியங்களை நகர மக்களுக்கு அளிக்கின்றனர். இதற்கு அவர்கள் அடையும் துன்பங்கள் பல. உழவர்களுக்குக் கைம்மாறு செய்ய வேண்டிய நகர மாந்தர் அவர்களைத் தாழ்ந்த மனப்பான்மையுடன் நோக்குகிறார்கள். மணிமுடியிலே இருந்த மாணிக்கம் மண்ணிலே உருண்டு கிடப்பதுபோல உள்ளது இன்றைய உழவர்கள் நிலை.

பாரி, ஓரி, காரி முதலிய கடையெழு வள்ளல்களாலும் பாராட்டப் பெற்ற உழுதொழில் மக்கள், பொற்கைப் பாண்டியனால் பரிசளித்துச் சிறப்பிக்கப்பட்ட உழவர்கள், சேரன் செங்குட்டுவனால் துயர் களையப்பெற்ற உழவர்கள், சோழன் நெடுங்கிள்ளியால் மேம்படுத்தப்பட்ட உழவர்கள், கவிச் சக்கரவர்த்தி கம்பனாலும், தமிழ் மூதாட்டி ஔவையாராலும் பாடிச் சிறப்பிக்கப்பட்ட உழவர்கள், இன்று இருக்கும் நிலை கண்ணீர் விட்டுக்கலங்க வேண்டிய கவலைக்கிடமான அவலநிலையில் இருக்கிறது உழைத்து உழைத்து உருக்குலைந்து போன பரிதவிக்கும் நிலையிலே உழவர்கள் உள்ளனர்.

ஆனால் அவர்களது உழைப்பைக்கொண்டு வாழும் சமூகமோ, அவர்களது, ஒட்டிய வயிறையும், குழிவிழுந்த கண்களையும் பார்ப்பதில்லை. பாடுபட்ட அவர்கள் நல்ல பலன் அடைய விடுவதில்லை. அவர்கள் நிலத்தை உழுவதற்கோ, உழுத நிலத்தைப் பயிரிடுவதற்கோ, சரியான சாதனங்களும், உதவிகளும் கிடைப்பதில்லை. அரசாங்கம் உழவர்கள் விஷயத்தில் அதிக கவனம் எடுத்துக்கொண்டு உழுவதற்கு வேண்டிய டிராக்டர் போன்ற மேநாட்டுக் கருவிகளையும் நல்ல விதைகளையும், ரசாயன முறைப்படி தயாரிக்கப்பட்ட நல்ல உர, உப்புக்களையும் அளித்து உதவ முன்வர வேண்டும். வாரத்துக்கு விடும் நிலச்சுவான்தார்களில் சிலர் உழவர்களுக்குச் செய்யும் கொடுமைகள் எண்ணிறந்தன. பேசியபடி நெல் கொடுப்பது கிடையாது. முன் பணமாகக் கொடுத்த பணத்தைத் திருப்பிக்கொடுப்பது கிடையாது. இத்தகைய கொடுமைகள் ஒழியவேண்டும். அவர்களும் சமூகத்திலே முக்கிய அங்கம் என நினைத்துச் சம உரிமைகள் வழங்கவேண்டும்.

"சுழன்றும் மேற்பின்னது உலகம்-அதனால்
உழந்தும் உழவேதலை"

என்னும் வள்ளுவர் வாக்கிற்கிணங்க பிற தொழில்களில் மக்கள் ஈடுபட்டுத் திரிந்தாலும் முடிவில் உலகம் உழவாது வழிப்படும்

வாழ்க உழவர்கள்!
வளர்க உழவுத்தொழில்!

திருவள்ளுவர் விழா — குழுவினர்

21 NOV 1956
MADRAS

திருவள்ளுவர் விழா

[க. மாசிலாமணி, 5ம் படிவம், 2ம் பிரிவு]

ஐக்கிய கிறிஸ்தவ உயர்நிலைப்பள்ளியின் 1955வது ஆண்டின் திருவள்ளுவர் விழா 17—2—55ல் இப்பள்ளியின் சபா மண்டபத்தில் நடைபெற்றது. இத்துடன் 25 ஆண்டுகள் இப்பள்ளியில் உழைத்து மறைந்த உயர்திரு. ரா. சடகோப ரெட்டியாரவர்கள் படத்திறப்பு விழாவும் கொண்டாடப்பட்டது.

இவ்விழாவிற்கு மதுரைத் தல்லாகுளம் அமெரிக்கன் கல்லூரியில் பல ஆண்டுகளாகத் தமிழ் விரிவுரையாளராக இருந்து இப்பொழுது ஓய்வுபெற்றவரும் தமிழ் அறிஞருமாகிய, உயர்திரு. செந்நாப் புலவர், ஆ. கார்மேகக்கோனார் அவர்கள் தலைமை தாங்கினார்கள். திரு. க. வேதநாயகம் என்பவரால் கடவுள் வாழ்த்து நல்ல இசையுடன் குறளில் பாட விழா ஆரம்பமாயிற்று.

பள்ளித்தலைமை ஆசிரியர் எல்லோரையும் வரவேற்றுப் பேசி எல்லோரையும் வருக! வருக!! என்று வரவேற்றார்கள். பள்ளியின் கட்டிட நிலையை எடுத்துக்காட்டி அது புதிதாகவும், விரைவாகவும் கட்டப்படுவதற்கு வேண்டிய பண உதவிகள் பொதுமக்கள் செய்யுமாறு வேண்டிக்கொண்டார்.

தலைவர் தன்னுடைய முன்னுரையில் கூறியதாவது:- வள்ளுவர் மதுரையில் வாழ்ந்தார் என்றும்; அவர் சிறந்த புலவர் என்றும் இவருடைய குறள் பாக்கள் உலகப் பொது மறையாக இருக்கின்றன என்றும், இதை எல்லோரும் நன்றாக விரும்பிக் கற்று அதன் படி நடக்க வேண்டும் என்றும் கூறினார். அவர் மேலும் பேசியதாவது; தான் "ஒளவையார்" என்னும் படக்காட்சியை காணவில்லை என்றும், காண முயன்றும் முடியவில்லை என்றும் கூறினார். அந்தக் காட்சியில் வள்ளுவர் குறளுக்கு தமிழ்ச் சங்கம் அனுமதிதரவில்லை என்றும், அதை அரங்கேற்ற ஒளவை திருவள்ளுவருக்கு உதவி செய்ததாக இருப்பதாகக் கேள்விப்பட்டதாகவும் கூறி வள்ளுவரைத் தாழ்ந்த நிலையில் வைத்துப் படம் அமைத்தவர்களைக் கண்டித்துப் பேசினார். மேலும் அவர் கூறினார் அந்தப்படக்காட்சியை தயாரித்தவர்கள் தமிழ் அறிஞர்களைக் கேட்டுப் படம் அமைத்திருந்தால் நலமாயிருக்கும் என்று கூறினார்.

படத்திறப்பாளர் உயர்திரு M. D. இராமசுப்பிரமணியம் B.A, பேசுகையில் தாம் இதே பள்ளியில், உயர்திரு. ரா. சடகோபரெட்டியார் அவர்களிடம் தமிழ் பயின்றதாகவும் கூறி, தம்மால் முடிந்த வரை இப்பள்ளி முன்னேற்றம் அடைவதற்கு உதவி செய்வதாகவும் கூறினார். மேலும் மாணவர்கள் எல்லோரும் கூடி, மறைந்த உயர்திரு. ரா. சடகோபர் அவர்களுடைய படத்தைத் திறந்து வைத்தால் மட்டும் போதாது. மாணவர்கள் எல்லோரும் நன்றாகத் தமிழைக் கற்று நல்லவர்களாக விளங்க வேண்டும் என்று கூறி, மறைந்த உயர்திரு. ரா சடகோப ரெட்டியார் அவர்களின் படத்தைத் திறந்து வைத்தார்.

உயர்திரு. ரா. சடகோப ரெட்டியார் அவர்களின் மருமகனார் படத்திற்கும், தலைவருக்கும், தலைமை ஆசிரியருக்கும், படத்திறப்பாளருக்கும் மலர் மாலைகள் சூட்டினார்.

சொற்பொழிவாளர் புலவர் உயர்திரு. க. திருமாறன் அவர்கள் "வள்ளுவன் தந்த நெறி" என்பது பற்றிப் பேசினார். அவர் கூறியதாவது: வெற்றிலை, பாக்கு, சுண்ணும்பு, முதலியவை சேர்ந்தால் எவ்வாறு ஒருசிவப்புப் பொருள் வருகிறதோ, அதேபோல் அறம், பொருள், இன்பம் சேர்ந்தால் வீடு என்னும் ஓர் புதிய பொருள் வரும் என்று கூறினார். தன்னலமின்றி யாருக்கும் கெடுதல் உண்டாகாதபடி பொய் சொல்லலாம் என்றும், கொலை செய்யலாம், கொலை செய்தவரைத் தண்டிக்கும்படி செய்யலாம் என்றும் தான் வள்ளுவர் நெறி கூறுகிறது என்று கூறி முடித்தார்.

தலைவர் முடிவுரையில் "நீங்கள் எல்லோரும் நன்றாகத் தமிழைப் படித்து குறளின் நீதியை அறிந்து, குற்றமற நடந்து உலக முழுவதும் தமிழையும், குறளையும் பரப்புங்கள்" என்று கூறித் தமது உரையை முடித்தார்.

கடைசியாக வித்துவான் உயர்திரு. அ. சாமிஐயா அவர்கள் நன்றிகூற வள்ளுவர் விழாக் கூட்டம் இனிது முற்றுப்பெற்றது.

CONNEMARA PUBLIC LIBRARY
21 NOV 1956
MADRAS

பள்ளிச் செய்தி

[வித்துவான் அ. சாமிஐயா]

1. மாணவர் தலைவர் பதவி ஏற்பு விழாவும், மா நடு விழாவும்:

4—8—54 மாலை நான்கு மணிக்கு இவ் விழாக்கள் அரசாடி மைதானத்தில் கொண்டாடப்பட்டன.

மா நடு விழா:—

தலைமையாசிரியரின் வரவேற்புரைக்குப் பின் திருமதி எரிக்சன் அம்மையார் தேசியக் கொடி யேற்றினர்கள், திருவாளர்கள் எரிக்ஸன், எட்வர்டு, டேனியல், முத்துக் கண்ணன் ஆகியோர்கள் மாக்கன்றுகளை நட்டார்கள்.

பின்னர் மாணவத்தலைவர் பதவி ஏற்பு விழா நிகழ்ந்தது. அதற்குப்பின் அவர் மந்திரிகளின் பெயர்கள் அடங்கிய பட்டியல் ஒன்றை தலைமை ஆசிரியரிடம் கொடுத்தார்.

மாணவர் பாராளுமன்றத்தின், மந்திரிகளின் பெயர்கள் பின்வருமாறு:—

1. முதல் மந்திரி	பெ. முத்துக்கண்ணன் VI. C.
2. விளம்பர மந்திரி	சு. வை. மாணிக்கம் V. A.
3. நிதி மந்திரி	பால்ராஜ் V. C.
4. சுகாதார மந்திரி	மீ. வைரவலிங்கம் VI. B.
5. நூல் நிலய மந்திரி	அ. ராமகிருஷ்ணன் VI. C.
6. கல்வி மந்திரி	அழகர்சாமி IV. A.
7. உடற்பயிற்சி மந்திரி	பி. டி. ஜெயராஜ் VI. A.
8. போக்கு வரத்து மந்திரி	வீ. வீராச்சாமி V. A.
9. வருகைப் பதிவு மந்திரி	ராஜாமணி V. B.
10. மகிழ்வுச் செலவு மந்திரி	பாலசுப்பிரமணியன்

2. உல்லாசப் பிரயாணம்:—

மதுரை, ஐக்கிய கிறிஸ்தவ உயர்நிலைப் பள்ளியின் உல்லாசப் பிரயாணக்குழு 27—8—54, மதுரையை விட்டுப் புறப்பட்டு குற்றாலம் சென்று, அங்கு மூன்று நாட்கள் தங்கி, இயற்கைக் காட்சிகளைக் கண்டும், அருவிகளில் நீராடியும், இன்புற்றனர். பின், 30—8—54, இரவு அவர்கள் மதுரை திரும்பி வந்தனர் அக்குழுவில், 350 மாணவர்கள், 12 ஆசிரியர்கள், தலைமையாசிரியர், ஆகியோர் இருந்தனர்.

School Pupil Leader.—P. Muthukannan

3. தலைமைத் தமிழாசிரியர் மறைவு:—

மதுரை ஐக்கிய கிறிஸ்தவ உயர்நிலைப் பள்ளியில் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக தலைமைத் தமிழாசிரியராகப் பணியாற்றிய உயர்திரு. ரா. சடகோப ரெட்டியார் அவர்கள் 22—9—54 காலை சுமார் 8-30 மணிக்கு தமது இல்லத்தில் திடீரென அமரகதி எய்தினர். அன்று மாலை சுமார் 7மணிக்கு அவரது உடல், ஆசிரியர்கள், மாணவர்கள் பின்வர, ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. எடுத்துச் செல்லுமுன், பள்ளியின்சார்

பில், தலைமை ஆசிரியர், இறந்த அன்னாரின் சேவையைப் பற்றியும், குணநலன்களைப்பற்றியும், ஒரு உருக்கமான சொற்பொழிவு ஆற்றி, அவருடலுக்கு மலர்மாலை சூட்டினார்.

4. திருவள்ளுவர் விழா:—

இப்பள்ளியின் வள்ளுவர் விழாக் கொண்டாட்டம், 17—2—55ல் செந்நாப்புலவர் உயர் திரு. ஆர். கார்மேகக் கோனார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவர் திருக்குறளின் மேன்மையைப்பற்றி ஒரு அரிய சொற்பொழிவு நிகழ்த்தினார். விருதுநகர் செந்திக்குமார் கல்லூரி, தமிழ் விரிவுரையாளர் உயர்திரு. திருமாறன் அவர்கள். "வள்ளுவன் தந்த நெறி" என்ற பொருள்பற்றி, ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினார். அவ்விழாவில், மற்றொரு முக்கிய நிகழ்ச்சி என்னவென்றால், பள்ளியின் தலைமைத் தமிழாசிரியர், மறைந்த, உயர்திரு. ரா. சடகோப ரெட்டியார் அவர்களின் திரு உருவப் படத்தை, இப்பொழுது விற்பனைவரி இலாகாவில் உயர்பதவி வகிக்கும், உயர்திரு. M. D. ராமசுப்பிரமணியன், B. A., அவர்கள் திறந்து வைத்தார். அவர் மறைந்த பெரியாரின் முன்னாள் மாணவர். அவர், தமது ஆசிரியரின் பண்பு நலன்களைப்பற்றி வெகு அழகாகப்பேசினார். பின்பு, திரு. சாமிஐயா நன்றி கூற, கூட்டம் முடிவடைந்தது.

5, சென்னை உல்லாசப் பிரயாணம்:—

தலைமை ஆசிரியர் உள்பட எட்டு ஆசிரியர்களும், சுமார் 120 மாணவர்களும், 25-2-55 தேதி வெள்ளிக்கிழமை புறப்பட்டு சென்னைக்கு சென்று, சென்னையிலுள்ள முக்கியமான இடங்களையும், காங்கிரஸ் பொருட்காட்சியையும் கண்டு, திங்கட்கிழமை காலை திரும்பினர். இதேபோல், மார்ச்சுமீ 4-ம் தேதி வெள்ளிக்கிழமை புறப்பட்டு, மற்றொரு பிரயாணக்கோஷ்டி, சுமார் 100 மாணவர்களும், ஏழு ஆசிரியர்களும், சென்னைக்குச் சென்று முக்கிய இடங்களைப்பார்த்துவிட்டு, திங்கட்கிழமை, 7-ம் தேதி, மதுரை வந்தது.



The President of the School Republic Inaugurates the Parliament.

U. C. HIGH SCHOOL MAGAZINE.

R. U. an Old Student of the U. C.?

If so, could you please send your address and the registration fee of Re. 1/- to the Secretary?

President:

Mr. K. S. SWAMINATHAN, B. A., L. T.,

Secretary:

Mr. A. ALBERT IGNATIUS, B. A., L. T.,



CONNEMARA PUBLIC LIBRARY
21 NOV 1956
MADRAS

Printed at Raja Press, 55, Dhalavai Street, Madurai:—1955

Our Masters in parade—our play ground at Arasaradi

Printed at Raja Press, Madurai:-55.